பொதுசன நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 07 வியாழக்கிழமை (19.02.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 062




# யுத்தப் பிரதேசத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்க இந்தியா உதவும்



## பிரணாப் முகர்ஜி மன்றில் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையின் போர்ப் பிரதேசங்களில் சிக்கியுள்ள பொதுமக்களை அங்கிருந்து வெளியேற்ற உதவி செய்ய இந்திய அரசு தயாராக இருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

விமானத் தாக்குதலில் காயமடைந்த சிறுவன்.



## செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் 30 தொன் பொருட்கள் அனுப்பி வைப்பு



பொருட்களை ஏற்றிச் சென்ற இழுவைப் படகு.

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் ஒருதொகுதி உணவுப் பொருட்கள் இழுவைப் படகு மூலம் வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருட்களை கொழும்பு துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான சிங்கபாகு-2 எனும் பெயர் கொண்ட இழுவைப் படகு மூலம் அரசாங்கம் நேற்று அனுப்பி வைத்தது. இந்த இழுவைப் படகில் 20 தொன் மா, 4 தொன் சீனி, 6 தொன் பருப்பு ஆகிய பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன. (ச-5)

## சம்பந்தன் எம்.பியின் மீது அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வன்னியில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பிழையான தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கி நாட்டு மக்களையும் சர்வதேச சமூகத்தையும் பிழையாக வழிநடத்திச் செல்ல முயற்சிக்கிறார் என தேசிய பாதுகாப்புக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல குற்றஞ் சுமத்தியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

முல்லைத்தீவில் அப்பாவி பொதுமக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கு அரசுதான் பொறுப்பு என இரா.சம்பந்தன் கூறியிருப்பது கவலைக்குரிய விடயம்.

பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறக் கூடாதென புலிகளே அவர்களைத் தடுத்து வைத்துள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பிரதிச் செயலர் இன்று வருகிறார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான பிரதி செயலர் ஜோன் ஹோம்ஸ் இன்று இலங்கை வரவுள்ளார்.

இந்த தகவலை இலங்கையின் வெளியுறவு அமைச்சர் றோகித போகொல்லாகம நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.

அவருடன் நேற்று முன்தினம் தொலைபேசியின் மூலம் (12ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு யுத்தம் தீர்வல்ல; முன்னாள் ஜனாதிபதி ஆலோசனை

(சென்னை)



அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்பொழுது நடைபெற்றுவரும் யுத்தமானது இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமையாது என இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

இறுதி சமாதானத்தை அடைவதற்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வே பொருத்தமானது என புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட சந்திரிகா குமாரதுங்க கூறினார்.

'அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்து நாங்கள் கவலையடைகிறோம்' (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் நேற்று குடும்பஸ்தர் தீக்குளிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழ் நாட்டில் உள்ள கடலூர் மாவட்டம், கடலூர் பழைய நகரம், குழந்தை கொலனியைச் சேர்ந்த சோதி என்று அழைக்கப்படும் தமிழ்வேந்தன் (வயது 30) என்பவர் தீக் குளித்துள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் இளம் சிறுத்தைகள் எழுச்சிப்பாசறை நிர்வாகியாக இருக்கும் இவர் ஏழு மாதக்குழந்தையின் (12ஆம் பக்கம் பார்க்க)

# விமானம் மற்றும் ஷெல் தாக்குதலில் 49 சிறுவர்கள் உட்பட 129 பேர் பலி

## மேலும் 294 பேர் படுகாயம்

(கொழும்பு)

வன்னியில் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதி மற்றும் சிறார்கள், பெண்கள் பராமரிப்பு இல்லங்கள் மீதும் நேற்று அதிகாலை இடம்பெற்ற எறிகணை மற்றும் விமானத் தாக்குதல்களில் 129 பேர் உயிரிழந்துள்ளனர். 294 பேர் காயமடைந்துள்ளனர்.

வன்னியில் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் நேற்று வீழ்ந்து வெடித்த எறிகணைகளால் 108 பேர் உயிரிழந்துள்ளதுடன் 223 பேர் காயமடைந்துள்ளனர்.

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான புதுக்குடியிருப்பு, மாத்தளன், அம்பலவன் பொக்கணை மற்றும் இடைக்காடு ஆகிய பகுதிகளில் நேற்று அதிகாலை 2 மணி தொடக்கம் 5 மணிவரை எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன.

மக்கள் தூக்கத்தில் இருந்த போது இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர்களில் 49 சிறுவர்களும் 21 பெண்களும் அடங்குவர்.

அதிகாலைவேளை இருளில் இச்சம்பவம் இடம்பெற்றதால் அதிகளவு உயிரிழப்புகள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை படைப் போர்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள (12ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளை மாளிகைக்கு முன்பாக தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

இலங்கையில் தமிழர்கள் மீதான படு கொலைத் தாக்குதலை தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரி வெள்ளை மாளிகைக்கு முன்பு அமெரிக்காவில் வசிக்கும் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் மற்றும் உண்ணா விரதத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையில் தமிழர்கள் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்த அமெரிக்க அதிபர் இந்தப் பிரச்சினையில் தலையிடவேண்டும் என்று கோரி படுகொலைக்கு எதிரான தமிழர்கள் என்ற அமைப்பு நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டது.

ஏராளமான தமிழர்கள் இதில் கலந்து கொண்டு வெள்ளை மாளிகை முன்பும் அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் முன்பும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கையின் வன்னிப் பகுதியில் இராணுவம் தொடர்ந்து குண்டுகளை வீசி வருவதாகவும் இதனால் தினந்தோறும் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்படுவதாகவும் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளனர்.

சண்டை நடைபெறும் பகுதியில் உள்ள மக்கள் கடும் உணவுப் பற்றாக்குறையால் தவிப்பதாகவும் அவர்களிற்கு மனிதாபிமான அடிப்படையில் உணவு, மருந்து உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை அளிக்க இலங்கை அரசு மறுத்து வருவதாகவும் கூறி இதற்கு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா நேரடியாகத் தலையிட்டு பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

இலங்கையில் விடுதலைப்புலிகள் அப்பாவித் தமிழர்களை மனித கேடயமாக உபயோகிப்பதாகவும் அவர்களை தனது பிடியில் இருந்து விடுவிக்குமாறு விடுதலைப் புலிகளுக்கு அமெரிக்கா நெருக்குதல் கொடுக்கவேண்டும் என்றும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதர் ஜாலியா விக்கிரமசூரியா வலியுறுத்தி இருந்த நிலையில் அங்குள்ள தமிழர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கையில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதற்கு அமெரிக்காவின் வெளிவிவகார செயலாளர் கிலாரி கிளிண்டன் முயற்சிகளை மேற்கொள்வதுடன் தேவை ஏற்பட்டால் அமெரிக்கா அழுத்தங்களையும் மேற்கொள்ள வேண்டும் என அமெரிக்க மதத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கிலாரி கிளிண்டனுக்கு மதத் தலைவர்கள் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது;

வன்னியில் தமிழ் மக்கள் துன்பங்களை எதிர்கொண்டு வருவது கவலை தருகின்றது. இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படுவதற்கான அழுத்தங்களை அமெரிக்க அரசு இலங்கை அரசுக்கு கொடுக்க வேண்டும்.

வன்னியில் வாழும் மக்களுக்கு உதவும் பொருட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புக்கள் அங்கு செல்வதற்கு ஏதுவாக இலங்கை அரசு உடனடியான போர் நிறுத்தம் மேற்கொள்ளவேண்டும். அதற்கு அரசு எதிர்ப்பு தெரிவித்தால் இலங்கை அரசின் மீதான தடைகள் குறித்து அமெரிக்கா கருத்தில் எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். (ச–5)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

(இருபாலை)

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் சு. இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாந்தீகம் சிரேஷ்ட உளநல ஆலோசகரும் திட்ட இணைப்பாளருமான சி.விஜயரட்ணம், சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மு. நாகேந்திரராஜா, கோண்டாவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நா.பிறேம்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச–136)

# வன்னியில் 100 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புக்குள் விடுதலைப் புலிகள்

## பிரிகேடியர் உதய நாணயக்கார தகவல்

வன்னியில் விடுதலைப் புலிகள் 100 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்புக்குள் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு பிரிகேடியர் மேலும் கூறியதாவது;

குறுகிய நிலப்பரப்புக்குள் சிக்கியுள்ள புலிகள் மீது இராணுவத்தின் 53, 55, 57, 58 மற்றும் 59 ஆகிய படையணிகளும் அதிரடிப்படையின் 2,3,4,8 ஆகிய பிரிவுகளும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

20முதல் 22 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட புதிய பாதுகாப்பு வலயத்துக்கு பெருந்தொகையான பொது மக்கள் வருகை தந்த வண்ணம் உள்ளனர். படையினர் இவர்களை ஆகாய மார்க்கமாக கண்காணித்து வருகின்றனர்.

கடந்த இரண்டு மாதங்களில் 35 ஆயிரத்து 756 பொது மக்கள் படையினரிடம் தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் ஓமந்தையில் பதிவு செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கு சமைத்த உணவும் மருத்துவ வசதிகளும் வழங்கப்படுகின்றன. நோயுற்றவர்கள் வவுனியா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் மீட்கப்பட்ட 1611 பேர் வவுனியா மற்றும் திருகோணமலை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை முடிந்த பின்னர் வவுனியா நலன்புரி முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் பிரிகேடியர் மேலும் கூறினார். (ச–5)

# யார் வேண்டுமானாலும் எக்கட்சிக்கும் செல்லலாம்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து யார் வேண்டுமானாலும் எந்த கட்சிக்கும் போகலாம். இதனால் கட்சிக்கு எந்த பாதிப்பும் ஏற்படமாட்டாது என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் கூறுகின்றார்.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான விநாயகமூர்த்தி முரளீதரன் (கருணா அம்மான்) தான் அக்கட்சியிலிருந்து விலகியுள்ளதாகவும் தானும் இன்னும் சிலரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேரப் போவதாகவும் தெரிவித்துள்ளார். இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட சிவனேசதுரை சந்திரகாந்தன் மேலும் கூறியதாவது;

ஜனநாயக நாட்டில் யாரும் எந்த கட்சியிலும் இருக்கலாம். அது அவர்களுடைய உரிமை மட்டுமல்ல; சொந்த விடயமுமாகும். இதனால் யாரும் அதற்கு குறுக்கே நிற்க முடியாது. எமது கட்சியிலிருந்து ஒரு சிலர் வேறு கட்சிக்குச் செல்லும் நிலை வரும்போது களநிலையில் மட்டும் சில பிரச்சினைகள் அதிகரிக்கலாம். இதனால் பொதுமக்களும் அரசாங்க அதிகாரிகளுமே சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு ஒரு தலைவரே இருக்க முடியும். எமது கட்சியின் தலைவராக விருந்த குமாரசாமி நந்தகோபன் (ரகு) என்பவரின் படுகொலையையடுத்து கட்சி தலைமைப் பதவி தொடர்பாக சில பிரச்சினைகள் எழுந்தது என்பது உண்மைதான்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை சகலரும் ஒரே கட்சியாக இருப்பதே மக்களுக்கு பலமாக இருக்கும். இதன் அடிப்படையிலேயே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனது வேலைத் திட்டங்களை முன்னெடுத்தது.

கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அரசியல் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், மக்கள் பலத்தையே நம்பியிருப்பதால் யார் எந்த கட்சிக்கு வேண்டுமானாலும் போகலாம். அதனால் எமது கட்சிக்கு பாதிப்பு ஏற்படாது என அவர் தெரிவித்தார். (ச–5)

# பிரிவுபசார விழா

(மானிப்பாய்)

வலி. தென்மேற்கு பிரதேச சபை ஊழியர் நலன்புரிச்சங்கத்தினால் நடாத்தப்படும் பிரிவுபசார விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மானிப்பாய் கலாசார மண்டபத்தில் ஊழியர் நலன்புரிச் சங்கத் தலைவர் ச.சந்திரமவுலி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்விழாவில் முதியோர் பராமரிப்பு நிலைய மாகாண முகாமை உதவியாளர் கே.ஆரூரன், சாவகச்சேரி நகரசபை மாகாண முகாமை உதவியாளர் க. ஜீவானந்தன், புங்குடுதீவு ஸ்ரீகணேசா வித்தியாலய ஆசிரியர் ந.சசிக்குமார் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ச–14)

# ஆளுநரின் விஜயம் இரத்தானது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதை அடுத்து வடக்கு மாகாண ஆளுநர் டக்சன் சரத் சத்திரலா, பிரதம செயலாளர் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களின் யாழ். விஜயம் இரத்து செய்யப்பட்டது.

இதனை வடக்கு மாகாண சபையின் யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி ரி.சிவலிங்கம் உறுதி செய்துள்ளார்.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் வடக்கு மாகாண விஷேட செயலணியின் தலைவரும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இன்று யாழ். செயலகத்தில் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

# விவாதக் களம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கலை மாணவர் மன்றமும் விவாத மன்றமும் பாடசாலைகளிற்கிடையே நடாத்தி வரும் விவாத மேடையின் தொடக்க நிகழ்வு இன்று வியாழக்கிழமை பி.ப.12.45 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விவாத மேடையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையில் 'இலக்கியம் காட்டிய வழியில் வாழ்கிறோமா? வாழவில்லையா?' எனும் விடயம் பற்றி விவாதக் களம் நடைபெறும்.

இவ் விவாதக்களத்திற்கு நடுவராக யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ரி.வேல்நம்பி கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ச–14)

# வெள்ளவத்தை கடற்கரையில் வர்த்தகர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைக்கடற்கரையில் மர்மமான முறையில் உயிரிழந்த சிங்கள வர்த்தகர் ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் பன்னிப்பிட்டியவைச் சேர்ந்த 63 வயதான குருப்பு ரத்னசிறி ஸ்டென்லஜ குருப்பு என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் மொறட்டுவையில் தனக்கு நெருக்கமான நண்பரிடம் கடன் கோரியிருந்ததாகவும் அதனை பெற்று வருவதற்காக நேற்று முன்தினம் வீட்டிலிருந்து சென்றதாகவும் அவரது மனைவி பொலிஸ் விசாரணையின் போது தெரிவித்துள்ளார். சடலம் களுபோவில வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச–5)


## உபநயன பிரம்மோபதேசம்

நிகழும் ஸர்வதாரி வருஷம் மாசி மாதம் 8ஆம் நாள் (20–02–2009) வெள்ளிக்கிழமை இந்தியா சென்னை–75இல் உள்ள L.C. மஹால் திருமண மண்டபத்தில் குருமண்டலம் வீரமணிதாசன் அவர்களின் ஆசியோடு

சிரஞ்சீவி அ.ஹரிப்பிரிய சர்மா
சிரஞ்சீவி அ. சபரீச சர்மா

ஆகிய இருவருக்கும் உபநயன பிரம்மோபதேசம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்துள்ளார்கள். இவ்விருவரும் சபரீச ஐயப்பன் அருள் பெற்று சகல செல்வங்களுடன் நீடுழி காலம் நலமுடன் வாழ வாழ்த்துமாறு வேண்டுகின்றோம். வீரமணிதாசன் அவர்களின் இன்னிசைக் கச்சேரி பி.ப.1.30மணிக்கு நடைபெறும்.

யாழ்/ அகில இலங்கை
சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்.
(அறங்காவலரும், குருசாமியும்)

இங்ஙனம்,
பிரம்மஸ்ரீ ஹரிஹர சுதசர்மா,
சோபனா தம்பதிகள்.

சென்னை, தொலைபேசி இல.9790849966, 9790319681

(2265)

# இன்று ஒரு தகவல்

## மகா வீரர்

அவர் ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்தவர். இருந்த சொத்துக்கள் எல்லாவற்றையும் வாரி வழங்கிவிட்டு தவம் செய்யக் காட்டுக்குப் புறப்பட்டார்.

அவர் கட்டியிருந்த எட்டு முழ பட்டு வேட்டியைத்தவிர அவரிடம் வேறு எதுவும் இருக்கவில்லை. கடைசியாக ஒருவன் வந்து ஏதாவது தரும்படி கேட்டான். அந்த எட்டுமுழ வேட்டியை இரண்டாகக் கிழித்து 4 முழத்தை அவனிடம் கொடுத்தார். மீதி 4 முழத்தை தன் இடுப்பில் கட்டிக்கொண்டு காட்டுக்குப் போய்விட்டார்.

இவன் கையில் கிடைத்த 4 முழத்தை எடுத்துக் கொண்டு கடைவீதிக்குப் போனான். அங்கு பழைய பட்டு வேட்டியெல்லாம் விலைக்கு வாங்கும் வணிகர் ஒருவர் இருந்தார்.

அவரிடம் போய், "இதை விலைக்கு எடுத்துக்கொள்கிறீர்களா?" என்றான்.

அவர் அதை வாங்கிப் பார்த்தார்.

"ஆகா... இது மிகவும் அருமையான வேட்டி – விலை உயர்ந்த ஜரிகை. உனக்கு எப்படி கிடைத்தது?" என்று கேட்டார்.

அவன் நடந்ததைச் சொன்னான்.

"அப்படியானால் இந்த வேட்டியின் இன்னொரு பாதியையும் மெதுவாக வாங்கிக் கொண்டு வா. உனக்கு நிறைய பணம் தருகிறேன்" என்றார் அந்த வணிகர்.

இவன் யோசித்துப் பார்த்தான்.

"கொஞ்சம் இருங்க... இதோ வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு நேராக காட்டுக்குப் போனான். அவர் எங்கே இருக்கிறார் என்று தேடிக் கண்டுபிடித்தான். அவர் ஒரு இடத்தில் தவக் கோலத்தில் இருந்தார்.

கட்டியிருந்த இடைவேட்டியும் அவரை அறியாமலே நழுவி கீழே விழுந்து விட்டது. அது இவனுக்கு மிகவும் வசதியாகப் போய்விட்டது. அவரைக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. மெதுவாக சத்தம் போடாமல் அடி மேல் அடிவைத்து நெருங்கினான்.

அவர் கண்ணை மூடித் தவத்தில் இருந்தார். இவன் மெதுவாக போய் கீழே கிடந்த அந்த துணியை எடுத்துக் கொண்டு சத்தம் போடாமல் திரும்பி நடந்தான். கொஞ்சத் தூரம் நடந்து சென்றதும், அவனது காலில் முள் ஒன்று தைத்துவிட்டது.

வலிதாங்க முடியாமல் 'அம்மா' என்று கத்தினான். இந்த சத்தத்தினால் அவரது தவம் கலைந்தது.

மெல்லக் கண்ணைத் திறந்து பார்த்தார். தன் இடையில் இருந்த வேட்டி அவன் கையில் இருந்தது.

இப்பொழுது அவர் நினைத்தார்.

"இந்த வேட்டி மீது நான் வைத்த ஆசை அல்லவா அவனைத் திருடனாக்கி விட்டது" என்று நினைத்தார். இது எப்படிப்பட்ட மனநிலை என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

தான் ஒரு பொருள் மீது வைத்த பற்று இன்னொரு மனிதன் திருடனாவதற்கு காரணமாகி விட்டதே என்று நினைக்கிறார்.

அப்படி நினைத்த அவர் யார் தெரியுமா? அவர் தான் மகாவீரர்.

"இழந்து விட்டேன் இழந்துவிட்டேன் என்கிறாயே நீ எதைக் கொண்டுவந்தாய் இழப்பதற்கு? நீ எதை உண்டாக்கினாய் இது அழிந்து விட்டது என்று சொல்வதற்கு?"

இது அவருடைய சிந்தனை. இன்றைக்கு நமது சிந்தனையெல்லாம் வேறு மாதிரியிருக்கிறது.

ஒருவன் நடுத்தெருவில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தான். அந்த வழியாக வந்த ஒருவர் "ஏனப்பா அழுகிறாய்?" என்று கேட்டார்.

"ஐந்து ரூபாய் இந்த இடத்தில் விழுந்து விட்டது சேர்... நெடுநேரமாக தேடுகிறேன். கிடைக்காது போலிருக்கு" என்றான்.

"எப்பொழுது தொலைந்தது" என்று கேட்டார்.

"அது எனக்குத் தெரியாது சேர்... பணத்தைத் தொலைத்தவன் தேடிப் பார்த்துவிட்டுப் போய் விட்டான். நான் அவனுக்கு பின்னால் தேட வந்தவன்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழில் சட்டவிரோத மதுபான நிலையம் சுன்னாகம் பொலிஸாரால் கைப்பற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பொலிஸ் அத்தியட்சகரின் விசேட பணிப்புரைக்கு அமைவாக சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட அதிரடியான சோதனை நடவடிக்கையின் போது யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் இருந்து சட்டவிரோதமான முறையில் இயங்கிய மதுபான விற்பனை நிலையம் ஒன்றை கண்டுபிடித்துள்ளதுடன் பல இலட்சம் ரூபா பெறுமதியான மதுபான வகைகளையும் கைப்பற்றியுள்ளனர்.



சட்டவிரோத மதுபான நிலைய உரிமையாளரையும் மேலும் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். குடாநாட்டில் சட்டவிரோதமான மதுபான விற்பனை நிலையங்கள் கடந்த கால போர் சூழலைத் தொடர்ந்து அதிகரித்துள்ளன.

பல்வேறு குற்றச் செயல்களும் இடம்பெறும் நிலையில் இந்த நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளார்கள். (ஓ-5)

# விண்ணப்பம் கோரல்

இலங்கைப் பரீட்சை திணைக்களத்தால் அறநெறிப் பாடசாலைகளிற் பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கான இந்துசமய இறுதிப் பரீட்சை எதிர்வரும் மே மாதம் நடத்தப்படவுள்ளது.


இப்பரீட்சைக்காண விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழ் மொழியில் மாத்திரம் நடத்தப்படவுள்ள மேற்படி பரீட்சைக்கு பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலையொன்றின் ஊடாக மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

மேற்பரப்பில் பத்தாம் ஆண்டில் சித்திபெற்று, பதினோராம் ஆண்டில் கல்வியை மேற்கொள்பவர்களும் ஏற்கனவே இப்பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்கள் மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை, பெலவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு பெப்ரவரி 20 ஆம் திகதி வர்த்தமானியிலோ அல்லது வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். (ஓ-2)



தீவக லயன்ஸ் கழகத்தினால் ஊர்காவற்றுறை மற்றும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட நிஷா புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் சிறிமோகனன் பயனாளி ஒருவருக்கு உலருணவுப் பொதியொன்றை கையளிப்பதையும் அருகில் தீவக லயன்ஸ் கழக தலைவர் ஏ. சபாநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

19.02.2009

(மாசி 7, வியாழக்கிழமை)

தசமி முன்னிரவு 11.17 மணிவரை

கேட்டை காலை 8.55 மணிவரை

இராகுகாலம் 2.02 - 3.32 மணிவரை

சுபநேரம் 8.02-9.32 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பிரயாணம், சரீரப்பிரயாசை, பண விரயம், வீண்பயம். |
| இடபம் | திருடர் தொல்லை, காரிய தடங்கல், உடல் நலக்குறைவு, போசன சுகம். |
| மிதுனம் | காரிய அனுகூலம், மனோதைரியம், செல்வாக்கு, தேகநலன். |
| கடகம் | தடைப்பட்ட காரியம்கைகூடும், தேகநலன், விருந்துபசாரம், பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | வியாபார நன்மை, காரிய இடையூறு, குடும்பக் கவலை, ரோக நிலை. |
| கன்னி | உடல் நலக்குறைவு, சுபசெலவு, பூர்வ புண்ணிய கருமம், காரிய தாமதம். |
| துலாம் | பிரயாண நன்மை, சகோதரர் உதவி, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை. |
| விருச்சிகம் | எடுத்தகாரியம் தாமதமாகும், மாதர் நட்பு, கடின வார்த்தை, தன விரயம். |
| தனுசு | பெரியோர் ஆதரவு, தேகநலன், புதிய முயற்சி, வாக்கு மேன்மை. |
| மகரம் | சயன சுகக்குறைவு, சோம்பல் நிலை, காரிய தாமதம், சுப செலவு. |
| கும்பம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனலாபம், குடும்ப மகிழ்ச்சி, போசன நன்மை. |
| மீனம் | நல்ல செய்தி, புதிய திருப்பம், அதிக பிரயாசை, மேன்மை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா |
|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 |
| பச்சைமிளகாய் | 140 | 130 |
| தக்காளி | 100 | 120 |
| அவரை | -- | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 |
| கோவா | 100 | 80 |
| கரட் | 80 | 90 |
| பூசணி | 40 | 50 |
| புடோல் | 50 | 60 |
| வாழைக்காய் | 140 | 140 |
| சின்ன வெங்காயம் | 40-80 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 70 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 |
| பயிற்றங்காய் | 60 | 80 |
| லீக்ஸ் | 160 | 160 |
| போஞ்சி | 40 | 40 |
| கீரை – 1 பிடி | 10 | 10 |
| தேசிக்காய் | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 |

# முல்லைத்தீவிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு வவு.வைத்தியசாலையில் உள்ளோரின் விபரம் வெளியீடு

(வவுனியா)

முல்லைத்தீவிலிருந்து காயப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 154 பேரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவர்களின் விபரம் வருமாறு;

தங்கராசா லோகேஸ்வரன்-(வயது 26), கரவெட்டி கிழக்கு, விஜயராசா ஜெசிந்தன் - (வயது 24) , யூனியன் கொலனி வாழைச்சேனை, சிவகுமார் அன்னலட்சுமி-(வயது 25), வட்டக்கச்சி கிளிநொச்சி, நடராசா பவளமணி-(வயது 58) , இல 18 , 3 ஆம் யூனிற் , திருவையாறு, கிளிநொச்சி, சிவலிங்கம் தனுசன்- (வயது 12) , திருநகர் கிளிநொச்சி , புலேந்திரசேகரன் காஹெந்தினி (வயது 16) , ஞானிமடம் பூநகரி, இராமச்சந்திரன் துளசிகா - (வயது 18) , இல 7, 3ஆம் யுனிற் , முரசுமோட்டை , பெரியசாமி இளநீலா, (வயது 10) றெட்பான விஸ்வமடு, காசிநாதன் சறோஜினிதேவி-(வயது 33), முரசுமோட்டை, பரந்தன்.

நாகரட்ணம் ஆனந்தன் -(வயது 38) , சன்னாசிபரந்தன் புளியங்குளம் , யேசுதாசன் மகேந்திரன்-(வயது 50), 426மண்கும்பான் வீதி, யாழ்ப்பாணம், மகாதேவா நடராசா-(வயது 45), ஜெயபுரம் , பல்லவராயன்கட்டு, மகேந்தி உதயபாலன்-(வயது 40), இல 13 , யூனியன் புலம் , அக்கராயன் , இராசதுரை குகதாசா -(வயது 30) , நல்லூர் பூநகரி , நல்லதம்பி நவநந்தராஜா- (வயது 31) இல 823 , விநாயகர் வீதி , துணுக்காய்.

ச.இமானுவேல் ஆனந்தராஜன்-(வயது 48) , சென்பற்றிக்ஸ் சேச் , அமெ.சிலோன் சுதந்திரபுரம், விநாயகமூர்த்தி மனோஜன்-(வயது 17), இல 102 ஸ்கந்தபுரம், கிளிநொச்சி , கார்த்திகேசு கவிதாசன்-(வயது 30) , உருத்திரபுரம் , கிளிநொச்சி , மனோகரன் ஜதுர்சன்-(வயது 6), இல 22, கணேசபுரம், கிளிநொச்சி, நித்தியானந்தன் நிரோஜா-(வயது 16),சன்னாசிபரந்தன், புளியங்குளம், சிறிகாந்தன் சுலக்சன்(வயது 7) , நல்லூர் , யாழ்ப்பாணம்.

அருள்செல்வன் வினிதா(வயது 33) , மாசாக் , பளை , இராமசாமி பழனியம்மா-(வயது 70) , இரண்டாம் கட்டை கிளிநொச்சி , ஆண்டிபிரண்சி -(வயது 28) , நெத்தலியாறு , தர்மபுரம் , மயில்வாகனம் சுதேவன்-(வயது 22) , கட்சன் வீதி , வட்டக்கச்சி , காசித்தம்பி சோமசுந்தரம்-(வயது 83) , இல 114 , முரசுமோட்டை , தேவசகாயம்-செபஸ்தியாம்பிள்ளை -(வயது 51) , பரப்பாங்கண்டல் , உயிலங்குளம் , அன்பழகன் சீதா-(வயது 29) , குருபரன் வீதி மூழ்ங்காவில் .

துரைசிங்கம் வினுசிகா-(வயது 15) , இல 34 , 11 , திருவையாறு கிளிநொச்சி , சிவகுமார் சிந்துஜன்-(வயது 38) , வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் , சிவகுமார் குமுதினி-(வயது 11) வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் , சிவகுமார் ஜிந்துஜன்-(வயது 6) வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

சண்முகம் கண்ணகியம்மா- (வயது 60) , றெட்பான வல்லிபுரம் , தனபாலசிங்கம் சுவர்னன்-(வயது 25) , முள்ளிவாய்க்கால் மேற்கு முல்லைத்தீவு , நல்லதம்பி பாலேஸ்வரன்-(வயது 31) , 4வார்ட் புதுக்குடியிருப்பு , நகுலேஸ்வரன் வினோத்-(வயது 16) , வட்டுக்கோட்டை , யாழ்ப்பாணம் , ரங்கன் செல்வராசா-(வயது 33) , மல்லாவி வட்டக்காடு , முனியாண்டி செல்வராசா-(வயது 50) , நடுமுள்ளிக்குளம்.

வேதநாயகம் காசிநாதன்-(வயது 34) , கோணாங்குளம் , கண்டாவளை , ஆ.விஜயபாலகிருஷ்ணன்-(வயது 39) , இல.696 , ஜெயபுரம் மல்லாவி , பி.யோகலிங்கம் -(வயது55) , இராமநாதபுரம் கிளிநொச்சி , முத்தையாயெஜரட்ணம்-(வயது 53) , விஸ்வமடு , குணபாலன் ஜெயதீசன்-(வயது 29) , மில் வீதி மல்லாகம் யாழ்ப்பாணம் , பாசிங்கம் கிருஜா-(வயது 20) , திருநகர் கிளிநொச்சி , சிவகுமார் லக்சனா-(வயது 13) , கனகராயன் குளம் , வவுனியா.

செல்வராசா தர்சிகா-(வயது 15) , தர்மபுரம் கிளிநொச்சி , சண்முகநாதன் வினோஜா -(வயது 13) , பரந்தன் காச்சிபுரம் ,கிளிநொச்சி , சிவராசா கபிலன்-(வயது 17) , கரும்புளியான் நட்டாங்கண்டல் , பத்மநாதன் சுஜீவன்-(வயது 16) திருநகர் கிளிநொச்சி , யோகராசா விதுசன்-(வயது 8) சுந்தரபுரம் , சுவாமிநாதன் ஜெயந்தன்-(வயது 27) ,351 , 5ஆம் யுனிற் இராமநாத புரம்.

கந்தையா பிரபாகரன்-(வயது 27) , 8ஆம் வார்ட் மந்துவில் புதுக்குடியிருப்பு , இராஜ்குமார் நிசாந்தினி -(வயது 22) , உடையார் கட்டு மூங்கிலாறு , ஜெயதீஸ்வரன் ஜெனீற்றா- (வய்து 14) , சுழிபுரம் யாழ்ப்பாணம்.செலஸ்ரின் அந்திரேஸ்-(வயது 60) , கோவிலடி அடம்பன் மன்னார், சுப்பிரமணியம் சத்தியநாதன்-(வயது24) , விஸ்வமடு மேற்கு , இராமானுஜம் மதிவண்ணன்-(வயது 12) , ஸ்கந்தபுரம் பத்தாம் ஒழுங்கை கிளிநொச்சி , இராமனுஜம் மதிவாணி-(வயது 8) , ஸ்கந்தபுரம் 10 ஆம் ஒழுங்கை கிளிநொச்சி .

நாகராசா பூபதியம்மா - (வயது 75), அரசடி, தொண்டமனாறு, யாழ்ப்பாணம், மதுஷா - (வயது 16), நெலுக்குளம் இ. தங்கல்முகாம், ரதீஸ்வரி - (வயது 24), நெலுக்குளம் இ. தங்கல் முகாம், துரைராசா தங்கராசா - (வயது 37), 154ஆம் கட்டை, செல்வபுரம், திருமுறிகண்டி, தங்கராசா கணேஷ் - (வயது 10), 154ஆம் கட்டை, செல்வபுரம், திருமுறிகண்டி.

ஞானொளி கோமதி- (வயது 33), சோலை தெற்கு, பல்லவராயன் கட்டு, ஞானொளி கிருஷா -(வயது 8), சோலை தெற்கு, பல்லவராயன் கட்டு, எஸ். கிருஸ்ணவேணி -(வயது 53), வட்டக்கச்சி, கிளிநொச்சி, அணீடில்க்ஷி -(வயது 13), வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு.

ஆர். துஷாந்தினி -(வயது 27), 1ஆம் வார்ட், முள்ளியவளை, முனியாண்டி அமிர்தவள்ளி -(வயது 61), மீசாலை மேற்கு, மீசாலை, யாழ்ப்பாணம், மதீஸ்வரன் ரஞ்சனாதேவி -(வயது 34), வற்றாப்பளை, முள்ளியவளை, மதீஸ்வரன் கீர்த்தனன் -(வயது 13), வற்றாப்பளை, முள்ளியவளை, புஷ்பராசா யசோதாதேவி -(வயது 40), அலம்பில், தங்கபுரம், முல்லைத்தீவு, சிவபாலன் விமலாதேவி -(வயது 47), 7ஆம் வார்ட், சிவநகர், புதுக்குடியிருப்பு.

சதீஷ்வரன் சசிகலா -(வயது 28), ஆலங்கேணி, கிளிநொச்சி, முருகேசு ராசேந்திரம் - (வயது 38), 2ம் வார்ட், கோரண்கட்டு, காளிமுத்து ரத்னம்- (வயது 58), இல. 35, விநாயகபுரம், இயக்கச்சி, கதிரவேலு வினோதன்- (வயது 36), உமையாள்புரம், பரந்தன், சின்னத்தம்பி பிரபாகரன் -(வயது33), தர்மன்கேணி, பளை, சின்னத்தம்பி விக்னராஜா - (வயது 55), இல. 720, சேவ்சென்ரர், வட்டக்கச்சி, சுப்பிரமணியம் சர்வாநந்தன் - (வயது 26), டி7, உருத்திரபுரம், கிளிநொச்சி, ராமநாதன் பஞ்சலிங்கம்- (வயது 44), நெத்தலி ஆறு, விஸ்வமடு.

நடராசா ராஜசுலோச்சனா- (வயது 48), 1ம் வார்ட், முள்ளியவளை, தங்கவேலாயுதம் ராஜநகுலன்- (வயது 33), நாவலடி, அல் வாய் கிழக்கு, அல்வாய், முத்துலிங்கம் சுரேஷ் - (வயது 24), முள்ளிவாய்க்கால், பாணைவாடி, முல்லைத்தீவு, பூபாலசிங்கம் மதீஷ்வரன் - (வயது 32), ஆஸ்பத்திரி விடுதி, புதுக்குடியிருப்பு, நவரத்னம் விஜயகுமார் - (வயது40), தேவிபுரம், ஏ யுனிட், புதுக்குடியிருப்பு.

அல்வின் அனுரா-(வயது30), ஐயன் கோவிலடி, முரசுமோட்டை, ஜெயசிங்கம் உதயசூரியன்-(வயது30), அராலிவீதி, சங்கானை, விநாயகர் செல்லத்துரை-(வயது76) கனகராஜன்குளம், வவுனியா, சின்னையா கிருஷ்ணகுமார்-(வயது44), கோணாவில், கிளி நொச்சி, மத்தியூஸ் அந்தோனியம்மா-(வயது64), வன்னேரிக்குளம்,கிளிநொச்சி, முருகேசு சேபனா-(வயது8), ஒட்டன்குளம், ஆறுமுகம் மகேஸ்வரி-(வயது18), கரடிப்போக்கு, பாரதிபுரம்.

ரகுவரன் பிரதீபா-(வயது28), வற்றாப்பளை, முள்ளியவளை, முல்லைத்தீவு, சண்முகலிங்கம் சரஸ்வதி-(வயது63) வேலணை கிழக்கு, 5ஆம் பிரிவு, சுந்தரபுரம், செல்வராசா செல்வரூபன்-(வயது28) 2ஆம்வார்ட், முள்ளியவளை மத்தி, பாலசிங்கம் யோகேந்திரன்-(வயது25), திருநகர் வடக்கு,374, கிளிநொச்சி, ராமையா பாக்கியராசா-(வயது 55), கள்ளியடி, இலுப்பைக் கடவை, சவரியான் செல்லக்குமார்-(வயது29), இலுப்பைக் கடவை, அந்தோனியார்புரம் ,மன்னார்.

ஜெ.நிரோஜா-(வயது45), சுதந்திரபுரம், முல்லைத்தீவு, பி.ஜீவித்திரா-(வயது15), இல.72, ஆனந்தநகர், கிளிநொச்சி, பி.ஜீவகரன்-(வயது19), இல.72, ஆனந்தநகர், கிளிநொச்சி, பி.பத்மலதா-(வயது41), இல.72, ஆனந்தநகர், கிளிநொச்சி, எஸ்.இராயேந்திரம்-(வயது47), இல.53, கனகபுரம், கிளிநொச்சி, கே.பார்த்தீபன்-(வயது13), இல.53, கனகபுரம், கிளிநொச்சி, கே.கீர்த்தனன்-(வயது14) இல.53, கனகபுரம், கிளிநொச்சி, கே.அருட்செல்வம்-(வயது40), இல.53, கனகபுரம், கிளிநொச்சி.

ஜே.வசந்தகுமாரி-(வயது37), ஆனந்தபுரம், கிளிநொச்சி, ஜே.டினுக்ஷான்-(வயது 03), ஆனந்தபுரம், கிளிநொச்சி, நிமலராஜினி-(வயது26), நட்டாங்கண்டல், அடம்பன், மன்னார், லலிதா-(வயது31), கட்டைக்காடு, கிளிநொச்சி, ஜெ.ஜெ.அன்னரனி-(வயது 59), நட்டாங்கண்டல், அடம்பன், மன்னார், ஆர்.அன்ரனிதாஸ்-(வயது12), பூங்குளம், யோகலிங்கம் தேன்மொழி-(வயது50), 5ஆம் யுனிட், இராமநாதபுரம்,கிளிநொச்சி, ரவிச்சந்திரன் மகேஸ்வரி-(வயது37), தேவிபுரம், புதுக்குடியிருப்பு.

அருள் ஸ்ரீதரன் சரண்யா-(வயது06) புளியம்பொக்காணை, முல்லைத்தீவு, அருள் ஸ்ரீதரன் சசிகலா-(வயது24) புளியம் பொக்காணை, முல்லைத்தீவு, குணரட்ணம்-சசர்வானந்தன் (வயது26), இல.46, கந்தபுரம், கிளிநொச்சி, ரவிச்சந்திரன் பிரதீபன்-(வயது14), 4ஆம், வார்ட், கற்சிலை மடு, பேராறு, கதிர்காமம் சேனாதிராசா-(வயது62) அனர்ந்தர் புளியம்குளம், வவுனியா, கந்தையா சாந்தகுரு-(வயது60), அனுராஜன், எஸ்.சண்முகலிங்கம்-(வயது63) சாந்திபுரம், மன்னார், ஏ.ரகுவரன்-(வயது29), வற்றாப்பளை, முள்ளியவளை, சுப்பிரமணியம் ரவிந்திரன்-(வயது47), இல. 90,சுப்பிரமணியம் வீதி, அரியாலை,யாழ்.

சிதம்பரம் கணேஷமூர்த்தி-(வயது49) இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, ரண்ணம் நாகேஷ்வரி-(வயது80), கணேஷபுரம் கிளிநொச்சி, பாலேஸ்வரன் துஷா-(வயது 25), 2ஆம் வார்ட், கோம்பாவில், புதுக்குடியிருப்பு, பாலேஸ்வரன் லனுஷாந்த்(4மாதம்), 2ஆம் வார்ட், கோம்பாவில், புதுக்குடியிருப்பு, எஸ்.சிவதர்சன்-(வயது16), சுதந்திரபுரம், முல்லைத்தீவு, ஐ.சசிதரன்-(வயது18), வட் டக்கச்சி, கிளிநொச்சி, எஸ்.பிரதீபன்-(வயது26), கனக்புரம், கிளிநொச்சி, இரத்தனசபாவதி கோவிந்தராசன்-(வயது31), குமுளமுனை, 6முள்ளியவளை, நல்லையா மதியழகன்-(வயது7), 2ஆம் கட்டை, பரந்தன், ஆ.சி.குயின்சேகர்-(வயது32), ஐ.சி.ஆர்.சி.வவுனியா.

விஜயகரன் விந்துஜா-(வயது21) 18/3, திருவையாறு,கிளிநொச்சி, குகநேசநாதன் சிவகௌரி-(வயது38) 18/3, திருவையாறு, கிளிநொச்சி, யோகநாதன் காண்டீபன்-(வயது16), ஸ்கந்தபுரம், 2ஆம் வாய்க்கால், கிளிநொச்சி, கணபதிப்பிள்ளை கனகலிங்கம்-(வயது54), நெடுங்கேணி, ஒலுமடு, வவுனியா, யோகராசா யோகேஷ்வரன்-(வயது 30) கிழவிக்குளம், பாலமோட்டை, ஓமந்தை.

எஸ்.விந்தன் (வயது 49) கண்டாவளை கிளிநொச்சி, கே.டெனியா(வயது 42) ஸ்கந்தபுரம்,கிளிநொச்சி, எஸ்.கௌதம் (வயது 8) திருநகர் கிழக்கு,கிளிநொச்சி, பி.சசிகுமார் (வயது 31) திருநகர் கிழக்கு, கிளிநொச்சி, ஏ.தம்பித்துரை(வயது71) கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம், பி.துஷேந்திரன் (வயது 18), ஆனந்தநகர்,கிளிநொச்சி, ரி.புவனேந்திரன் (வயது 50), இல.72, ஆனந் தநகர்,கிளிநொச்சி, பி.பரமேஸ்வரி (வயது 34), சுதந்திரபுரம்,புதுக்குடியிருப்பு, பி.ஜெயா (வயது6), சுதந்திரபுரம்,புதுக்குடியிருப்பு,ஆர்.பெருமாள் (வயது 35), சுதந்திரபுரம்,புதுக்குடியிருப்பு, ஜீ.ருக்ஷனா (வயது7), உதயநகர், கிளிநொச்சி, கே.கௌரிதரன் (வயது 29), உதயநகர், கிளிநொச்சி, கே.சுந்தரலிங்கம்(வயது 62), இல.17,ஆனந்தநகர், கிளிநொச்சி, ஏ.அறிவகன் (வயது 13), இல.53,கன கபுரம், கிளிநொச்சி.



புதுக்குடியிருப்பு பகுதி மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தவர்களைப் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 75

### ஹெள மக்களும் தமிழ் மக்களும் பொ.ஆ.300-900

ஆதி வரலாற்றுக் காலத்தில் சிறப்பிடம் பெற்றிருந்த சோழரும் பாண்டியரும் இக் காலப் பகுதியில் ஆட்சியிழந்து மறைந்தனர் என்பது தற்பொழுதுள்ள சான்றுகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக் கூடியதே. அவர் ஆட்சி நடத்திய இடங்களில் களப்பிரர் என்போரும் பிற ஆட்சியாளரும் ஆதிக்கம் பெற்றிருக்கலாம்.

எனினும், இக் காரணத்துக்காக நாட்டில் அரசியல் உறுதியின்மையோ, குழப்பமோ காணப்பட்டது என்று கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை.

ஆதி வரலாற்றுக் காலத்தில் சோழரும் பாண்டியரும் தத்தம் ஆதிக்கத்தையும் ஆள்புலத்தையும் பெருக்கிக் கொள்ளப் பல போர்களில் ஈடுபட்டனர்.

அக்காலத்து அரசியல் நிலைமைக்கும் மூன்றாம் நூற்றாண்டின் பின் ஆறாம் நூற்றாண்டு வரை காணப்பட்ட நிலைமைக்கும் இடையில் பெரும் வேறுபாடு இருந்தது என்று கூறமுடியாது. சேர, சோழ, பாண்டியர் முடியுடை மூவேந்தர் எனச் சங்ககாலப் புலவர்களால் போற்றப்பட்டதன் விளைவாக அவர்கள் ஆண்டகாலம் ஒரு பொற்காலம் என்ற கருத்து உருவாகியதனால், அம் மன்னர்கள் ஆட்சி மறைந்ததும் அரசியலில் குழப்பம் ஏற்பட்டது என்ற கருத்துத் தோன்றியது எனலாம்.

### களப்பிரர் ஆட்சி

தமிழ் நாட்டில் சோழரையும் பாண்டியரையும் வென்று ஆதிக்கத்தை நிலைநாட்டியோர் யார் என்பது இலகுவில் அறியக் கூடிய விஷயமாகாது. இப்படி வெற்றி பெற்றோர் தனியொரு வம்சத்தையோ இனக்குழுவையோ சேர்ந்தவர்கள் என்றும் கொள்ளமுடியாது. களப்பிரர் இவர்களுள் ஒரு பிரிவினராக இருக்கலாம்.

இவர்கள் யாராக இருந்தாலும், இவர்கள் வெற்றியால் தமிழ்நாட்டில் பல நூற்றாண்டுகளாக ஆட்சி நடத்திய பழைய ஆட்சிக் குடும்பங்களைச் சேர்ந்தோர் ஆதிக்கத்தை இழந்தனர் எனத் தோன்றுகிறது.

ஆதிக்கத்தை இழந் தாலும், இக் குடும்பங்களைச் சேர்ந்த பலர் தத்தம் நகரங்களில் இருந்திருக்கலாம். ஆனால் சிலர் வேறிடங்களுக்குப் புலம் பெயர்ந் தனர் என்று கொள்ள இடமுண்டு. சிலர் தமிழ் நாட்டுக்கு வடக்கே செல்ல வேறு சிலர் தெற்கே இலங்கைக்குச் சென்றனர் எனலாம்.

அரசியற் குழப்பங்கள் ஏற்படும் காலத்தில் ஓர் அரசில் ஆதிக்கம் இழந்தோர் இன்னோர் அரசில் அடைக்கலம் பெறுவது தென்னிந்தியா - இலங்கைப் பிராந்தியத்தில் பொ.ஆ. தொடக்கத்திலிருந்தே காணக் கூடியதாய் உள்ளது. இதற்கு அமைய, சோழ நாட்டில் ஆதிக்கம் இழந்த சிலர் வடக்கே ஆந்திரப் பகுதிக்குச் சென்று அடைக்கலம் பெற்றனர் என்பது சில பிற்பட்ட தெலுங்கு மூலாதாரங்கள் வாயிலாக அறியக் கிடக்கின்றது. இவ்வாறே பாண்டியர் குலத்தைச் சேர்ந்த சிலர் இலங்கைக்குச் சென்றனர் என்று கொள்ள முடியும். ஐந்தாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் ஆட்சியைக் கைப்பற்றிய தமிழ்த் தலைவர்களுள் முதலாவதாகக் குறிப்பிடப் படுபவன் பண்டு என்ற பெயரைக் கொண்டுள்ளான்.

இது பாளியில் பாண்டியரைக் குறிப்பதாகும். தமிழ்நாட்டில் மூன்றாம் நூற்றாண்டுக்கும் ஆறாம் நூற்றாண்டுக்கும் இடையில் வலிமை வாய்ந்த அரசுகள் எழுச்சி பெறவில்லைஎனலாம். இதனால் தமிழ் அரசுகளின் படையெடுப்புகள் எதுவும் இலங்கையை நோக்கி நடத்தப்படவில்லை.


ஆறாம் நூற்றாண்டின் பின் தமிழ் நாட்டின் அரசியலில் முக்கியமான சில முன்னேற்றங்கள் ஏற்பட்டன. முதற் தடவையாக பேரரசுகள் என்று வர்ணிக்கத்தக்க இரண்டு அரசுகள் தமிழ்நாட்டின் பெரும்பாகத்தை உள்ளடக்கி எழுச்சிபெற்றன. முதலாவது தொண்டைமண்டலத்தில் எழுச்சிபெற்ற பல்லவப் பேரரசு, மற்றது பாண்டியப் பேரரசு. இவையிரண்டும் தங்கள் ஆதிக்கப் படர்ச்சியின் போது இலங்கைக்கும் படையெடுப்பு நடத்தின. இதனால் இலங்கையில் தமிழ் இனக் குழுவின் வளர்ச்சியில் இந்த அரசியல் காரணி ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

### பௌத்த சமண மதங்களின் எழுச்சி

இக் காலப் பகுதியில் தென்னிந்தியாவின், குறிப்பாகத் தமிழ்நாட்டின், சமய நிலை இலங்கை வரலாற்றை விளங்கிக் கொள்ள முக்கியமானது. மூன்றாம் நூற்றாண்டுக்கும் ஆறாம் நூற்றாண்டுக்கும் இடையில் பௌத்தமும் சமணமும் பெரும் வளர்ச்சி பெற்றிருந்தன.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

ஆறாம் நூற்றாண்டில் இவை வீழ்ச்சியடைய, சைவமும் வைணவமும் மேலோங்கி எழுந்தன. இந்நிகழ்ச்சிகள் இலங்கையில் தமிழ் இனக்குழு வளர்ச்சி பெற்ற வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் காரணிகளாம். (தொடரும்)




வலி.கிழக்கு-கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் சாந்திகம் நிறுவனத்தால் 250 முதியோருக்கு உணவல்லா பண்டங்கள் வழங்கப்பட்டது. வலி.கிழக்கு முதியோர் பேரவையின் தலைவர் ஏ.சி.ரி.கிருஷ்ணராஜா பயனாளி ஒருவருக்கு பொருட்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



உலக உணவுத் திட்டத்தின் நிதியுதவியுடன் ஊரெழு கணேச வித்தியாசாலையில் நிர்மாணிக்கப்பட்ட சமையல் கூடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்வித் திணைக்களப் பொறியியலாளர் கு.சிவபாலன் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் பாடசாலை அதிபர் சி.திரிகரன், உலக உணவுத் திட்ட முகாமையாளர் எஸ். பிரான்சிஸ், பாடசாலை முன்னாள் அதிபர் இ.குலசிங்கம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:நீர்வேலிச் செய்தியாளர்)

# சுதேச நாட்டியம் பத்திரிகையும் (1902-1915)

# கல்லடி வேலனும் 14

### *சுதேச நாட்டியத்தில் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் பற்றிய தகவல்கள்*

எந்த ஒரு விடயம் பற்றிய ஆய்விலும் அடிப்படையாக அமைவது பொருளாதாரம் என்பது எவருக்கும் உடன்பாடான விடயமாகும். இப்பிரதேசத்தின் பொருளாதாரம் பற்றிய விடயத்தில் அதிக அக்கறையுடன் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

அப்பத்திரிகையின், முத லாவது பிரதியிலேயே 'யாழ்ப்பாணத்திற்கு வேண்டிய அவசியங்கள்' என்ற கட்டுரை இடம் பெற்றுள்ளது. இக்கட்டுரையில், அக் கால யாழ்ப்பாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான பிரச்சினைகள் பற்றியும், அவற்றைத் தீர்ப்பதற்கு அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்வுகள்பற்றியும் ஆராயப்பட்டுக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவை யாழ்ப்பாணப் பொருளாதாரம் பற்றிச் சிந்திப்பவர்களுக்கு உதவியாக அமையக் கூடியவையாக உள்ளன.

'... இந்நாடுநன்னாடாவதற்கு இனி வேண்டியவைகளெவையென்பதைக் குறித்துச் சிறிது சிந்திப்போம்.

1. *புகையிரதம்*:-வியாபாரத் தொழிலை மிகுதியும் நடாத்தல் வேண்டும். ஏற்றுமதி, இறக்குமதி இடையறாது நடைபெறின், தடைபெறாது பணம் வருமென்பதிர் தர்க்கமின்று. பின்வரும் நயங்கள் பிசகாது நடைபெறும். நானாவித பொருள் வரவுகளாலும், பண்டமாற்றாதிய புரியும் வழிகளாலும், ஏனையோராலும் விதந்து, வியந்துரைக்கப்படும், நாகரிகத்தையும், செழிப்பையும் வளர்பிறையொத்து வளர்ந்து வருமென்பதும் ஒன்று...'

2. *தண்ணீர்க்குழாய் திறத்தல்*:- நம் தேயம் வடதேயங்களைப் போல யாறுகுளமின்றி இருத்தலானும், அதனாலனேக நிலங்கள் சாகுபடி செய்தற்கு வசதியின்றியிருத்தலானும், அவ்விடங்களுக்கு நீர்பாய்ச்சும் வழிவகைகளைத் தேடல் ஒன்று.

கீழ்ப்பகுதிகளிலுள்ள கிணறுகள், குளங்கள், மணலிலிருந்து பொசிந்து வரும் சிற்றூற்றுகளாகவிருக்கின்றன. அத்தடாகங்களின் தண்ணீருஞ் சகதி, மரவேர் முதலிய பதார்த்தங்களை யள்ளிவருதலான் ஓர் வகைக் கந்தமும் ஊறிக் கொண்டிருக்கிறது.

'உண்டாற்றெரியுமுணவினுரிசி' என்பது போலப் பருகினாற்றெரியு மவ்விடத் தண்ணீர். அவை சுகத்தின் பாவிப்புக்குக் கூடியனவல்லவென்பது பிரத்தியட்சம். அவ்வகையிடங்களுக்குக் குழாய்களின் மூலந் தண்ணீர் அனுப்பப்படவேண்டியது ஒன்று. அந் நிலங்களிற் கற் பாறையிலிருந்து ஊறி வருந் தண்ணீரையுடைய...

3. *கமத்தொழில்*:- அனேகர் தங்கள் வாணாட்களை வீணாட்களாக்கிக் கஞ்சிக்கும் வழியற்று அலைந்து திரிகிறார்கள். அவ்வா றானவர்க்கு அவரவர் புரிதற்குத் தகுந்த கிரியை கொடுத்தல் வேண்டும். பலர் காணி பூமியற்றிருக்கின்றனர். அநேகர் குத்தகைக்கு நிலம்வாங்கிப் பயிரிடுகின்றனர். சிலவேளைகளிலிவர்கள் வரும்படி குத்தகைக் காசுமேற் பற்றாமற் போகின்றது.

இவற்றிற்கு வேண்டியவை பின்னாற் சாற்றப்படும். தொழில் செய்வதற்குத் தகுதியான இடங்களை ஆராய்தெடுத்தலொன்று. அப்படித் தொழில் செய்யப்படும் நாடுகளுக்குக் கிட்டக் குடியேற்றலினொன்றாம். உத்தம பசளையை உண்டாக்கும் விதங்களை ஆராய்ந்தெடுத்தல் வேறொன்றும். இப்படி வருமானம் தரத்தக்க இடங்கள் தொகையாயிருப்பின் அவைகளுக்குக் கிட்டப் புகையிரதந் திறத்தல் பிறிதொன்று. கடற்கரைக்கணித்தாயுள உவர் நிலங்களை மாற்றும் உபாய வழிகளைத் தேடல் அவசியமான மற்றொன்றாயிருக்கிறது.

4. *கைத்தொழில்*:-யாழ்ப்பாணத்தில் அதிகமாய்க் கைத்தொழில் நடக்கிறதில்லை. சீலை நெசவு செய்கிறவர்களும் பானை, சட்டி உண்டாக்குகிறவர்களும் வேறு பல வேலை செய்கிறவர்களும் இடைக்கிடையே இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தின திக வரும்படியாயுள்ள பொருள் புகையிலையே. அதைத் தட்டுப் புகையிலையாய் உலர்த்தலொன்று. இந் நாட்டிலிருந்த அதிகமாய்க் காலத்திற்குக் காலம் ஏற்றுமதியாகும் பனந்தும்பினால் அதிக வரும்படி தரத்தக்க உபாய வழிகளை உண்டாக்கல் இன்னொன்று.


இந் நாட்டிற்கு இறக்குமதியாகும் சாமான்களிற் பிரதானமானது சவுளி வகையே. அவற்றை இங்கே தானே உண்டாக்கியதற்கு வேண்டும் யந்திர வகைகளை உபயோகித்தல் அத்தியாவசியமான மற்றொன்றாயிருக்கிறது.

5. *தமிழ்க்கல்வி உச்ச நிலைக்கு வரத்தக்க ஏதுக்களைச் செய்தல்*:- தமிழ் பாஷை யாழ்ப்பாணத்தில் குறைந்து குறைந்து வருகின்றது. தமிழில் நல்லாய்த் தேர்ச் சிய டையும் பிள்ளைகள் மிகச் சொற்பம். இலக் கணம் வரவர அருகிப் போகின்றது. சிலர் தமிழிற் சொற்பமேனும் படிப்பியாது பாலிய வயதில் தங்கள் பிள்ளைகளை இங்கிலிஷ் படிக்கிறதற்கு அனுப்புகிறார்கள் தன் சுயபாஷையைப் பற்றியர்தொன்றுந் தெரியாதவன் பகிடிக்காரனாவான்...' (சு.நா.15.09.1902)

திருமதி.சோ.கிருஷ்ணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

இத்தகைய கருத்துக்கள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் க.வேயினால் குறிப்பிடப்பட்டிருப்பது மிகவும் முக்கியமான தாக அமைகிறது.

இக் காலத்தில் வேறு யாரேனும் இந்த அளவுக்கு யாழ்ப்பாணத்தின் பொரு ளாதார நிலை பற்றியும், இப்பிரதேசத்திற்கு வேண்டியவையாவை என்பது பற்றியும் முழுமையான,ஒரு கருத்தமைவினை வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை. (தொடரும்)



நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினரான வடக்கு, கிழக்கு மாகாண உதவிக் கணக்காய்வாளர் நாயகம் எஸ்.கனகசிங்கம் மற்றும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வையும், திருமதி றஞ்சினி கனகசிங்கம் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.(படங்கள்:-பரு.நிருபர்)

## மெய்வல்லுநர் போட்டி

கைதடி நாவற்குழி அ.த.க.வித்தியாலய மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக் கிழமை பிற்பகல் 1 மணிக்கு வித்தியாலய அதிபர் சி.சோமசுந்தரம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சத்திய நாதன், சிறப்பு விருந்தினராக கியூடெக்-கரித்தாஸ் நிறுவன இணைப்பாளர் செல்வி மரியரட்ணம் பத்மசேகரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-21)

## மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம், இலங்கை வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி சுன்னாகம் தெற்கு ஒற்றுமை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இப் போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு காளி அம்பாள் விளையாட்டுக் கழகமும் எதிர் யுவசக்தி விளையாட்டுக்கழகமும் நாளை பிற்பகல் 4 மணிக்கு மறு மலர்ச்சி விளையாட்டுக்கழகமும் எதிர் புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஓ)

## நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு

யா/சென் மேரிஸ் றோ.க.த.க.பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக அதிபர் ம.செபஸ்தியாம்பிள்ளை, செயலாளராக க.மோகனரூபன், பொருளாளராக லா.ய.அன்ரனீற்ரோ, உபசெயலாளராக சி.சுரேஸ்குமார் ஆகியோருடன் 16 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஓ-6)

## மீட்டல் விரிவுரைகள்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டமேற் கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கான மீட்டல் வகுப்பு நாளை மறுநாள் சனிக் கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து மாணவர்களும் இவ் மீட்டல் விரிவுரைக்கு தவறாது சமுமகளிக் குமாறு யாழ்.பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## தண்ணீர் தொட்டிகளில் நீர் தாவரங்கள் வளர்க்க முயற்சி

(கோண்டாவில்)

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் முன்னைய காலங்களில் அமைக்கப்பட்ட கால்நடைகளுக்கான தண்ணீர்த் தொட்டிகள் வீதி அபிவிருத்தி வேலைகளுக்காக கவனமாக அகற்றப்பட்டு வருகின்றன.

அரும் பொருட்களான இவற்றை பேணி பாதுகாக்குமாறு ஆர்வலர்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து நல்லூர் பிரதேச சபை அத்தொட்டிகளில் தாமரை, ஆகாயத் தாமரை, செங்கழுநீர், நீலோற்பலம் போன்ற நீர் மூலிகை தாவரங்களை வளர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. (ஓ-36)

## சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தின் வலைப்பந்துப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தின் வலைப்பந்துப் போட்டிகள் 15, 17,19 வயதுப் பிரிவினருக்கான போட்டிகள் 26,27,28 ஆம் திகதிகளில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

26 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 12.45 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் 15 வயதின் கீழ் பிரிவில் உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்துடன் மாதகல் சென் ஜோசப் வித்தியாலமும், என் ஆன்ஸ் R.C. வித்தியாலயத்துடன் சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயமும்,இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயத்துடன் பண்டத்தரிப்பு ஜசிந்தா மகாவித்தியாலயமும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியுடன் உயரப்புலம் குணபாலன் வித்தியாலமும், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையுடன் பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயமும், சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயத்துடன் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும், இளவாலை கன்னியர்மடம் வித்தியாலயத்துடன் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையும் மோதவுள்ளன.

17 வய்தின் கீழ் பிரிவில் சில்லாலை R.C. வித்தியாலயத்துடன் இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயமும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியுடன் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையும், மானிப்பாய் சென் ஆன்ஸ் R.C. வித்தியாலயத்துடன் பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயமும், சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயத்துடன் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையும், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியுடன் இளவாலை கன்னியர்மடம் வித்தியாலயமும் மோதவுள்ளன.

19 வயதின் கீழ்பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியுடன் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையும்,மாதகல் சென் ஜோசப் வித்தியாலயத்துடன் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியுடன் சில்லாலை R.C. வித்தியாலயமும், மாதகல் சென்ஜோசப் வித்தியாலயத்துடன் இளவாலை கன்னியர் மடம் வித்தியாலயமும், இளவாலை கன்னியர்மடம் வித்தியாலயத்துடன் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும் இளவாலை R.C. வித்தியாலயத்துடன் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையும் மோதவுள்ளன.

27 ஆம்திகதி பிற்பகல் 1 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் 15 வயதின் கீழ் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியுடன் மாதகல் சென்ஜோசப் வித்தியாலயமும், மானிப்பாய் சென் ஆன்ஸ் R.C. வித்தியாலயத்துடன் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும், மானிப்பாய் மகளிர் கல்லூரியுடன் சில்லாலை R.C. வித்தியாலயமும், 17 வயதின் கீழ் பிரிவில் மாதகல் சென்ஜோசப் வித்தியாலயத்துடன் மானிப்பாய் மகளிர் கல்லூரியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியுடன் சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயமும் 19 வயதின் கீழ் பிரிவில் பண்டத்தரிப்பு மகளிர் வித்தியாலயத்துடன் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயமும் மோதவுள்ளன.

அத்துடன் 15,17 வயதின் கீழ் பிரிவுகளில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர்களுக்கிடையிலான காலிறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளது.

28 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் 15,17,19 வயதின் கீழ் பிரிவில் வெற்றிபெற்றவர்களுக்கு இடையிலான அரையிறுதிப் போட்டியும் மூன்றாம் இடத்தை தெரிவு செய்வதற்கான போட்டியும் இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளன.

மேலும் இப் போட்டிகளுக்கான மைதான ஒழுங்கு மேற்பார்வைகளை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் உப அதிபரும் விளையாட்டுத்துறை பொறுப்பாளருமான கு.விமலன் மேற்கொள்ளவுள்ளதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி தெரிவித்துள்ளார். (ஓ)

## யோகாசன வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோககேந்திர நிலையம் நடாத்தும் புதிய யோகாசன வகுப்புக்கள் இல 331, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு என்னும் இடத்தில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி பஜனை நிலையத்தில் எதிர் வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7மணிக்கு சிவலிங்க யோக கேந்திரா செயலாளர் சிவ. உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி வகுப்புக்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் அனைவரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ளலாம் எனவும் இணைய விரும்புவோர் தங்கள் பெயர்களை மேற்காணும் முகவரியில் பதிவு செய்யுமாறும் வேண்டப்படுகின்றனர்.

மேலும் இப் பயிற்சி நெறியை பூரணமாக பூர்த்திசெய்பவர்களுக்கு சிவலிங்க யோக கேந்திர நிலையத்தால் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## சிவராத்திரி விழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கணபதீஸ் வரம் சிவன் கோவில் தம்பாட்டி முருகன் ஆலயம் ஆகியவற்றில் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கள் முதல் 24 ஆம் திகதி அதிகாலை வரை சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது - நான்கு ஜாமம் பூசைகள், ஆராதனைகள் சொற்பொழிவுகள் ஆகியன நடைபெறும். (ஓ-72)

## வாராந்த சொற்பொழிவு

(நல்லூர்)

இணுவில் கந்தசுவாமி கோவிலில் இளந் தொண்டர் சபையின் ஆதரவில் வாராந்தம் இடம்பெறும் சொற்பொழிவுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ''சைவசமயிகள் வாழ்விற்கு வழிகாட்டும் இந்துமதம்'' என்னும் விடயம் பற்றி கனக வாருதி வி.கனகராசா சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ-18)

## ஏகாதசி விரத பூசைகள்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் நாளை வெள்ளிக்கிழமை ஏகாதசி விரத பூசைகள் மாலை 3.30 மணிக்கு சங்கல்பத்துடன் ஆரம்பமாகும். பூசைகளை அடுத்து சுவாமி உள்வீதி வலம் வரும் திருக்கோலக் காட்சி இடம்பெறும்.(ஓ-36)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-கன்னாதிட்டி காளியம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பரத்திருவிழாவும், 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் தொடர்ந்து மஹாயாக கும்பாபிஷேகமும் நடைபெறும்.

அத்துடன் 11 ஆம் திகதி பகல் 11 மணிக்கு பூங்காவனமும், 12 ஆம் திகதி மாலை 4 மணிக்கு வைரவர் மடையும் இடம்பெறும். (ஓ-2)

# யாழ்.செய்திகள்

## கொள்ளை சம்பவத்தில் கைதானவர்கள் பிணையில் செல்ல அனுமதி

பெண் அதிபரின் வீட்டில் கொள்ளை, தீவைப்புச் சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் தலா 25 ஆயிரம் ரூபாவுக்கான இரு ஆட் பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டது.

கப்புது ஏகாம்பர வித்தியாலய அதிபர் திருமதி. தவமலர் ஜெயக்குமாரின் வீட்டில் 4 இலட்சம் ரூபா பொருட்களைக் கொள்ளையிட்டதோடு சுமார் 11/2 இலட்சம் ரூபா பொருட்களுக்குத் தீ வைத்தமை பற்றிய விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடி பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்தனர்.

இம் மூவரும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜ செய்யப்பட்டனர். (ஓ-52)

## வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் எந்திரவியில் தொழில்நுட்பக் கற்கை நெறிக்காக புதிதாக விண்ணப்பித்த, விண்ணப்பிக்க இருக்கின்ற மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் இடம் பெறவுள்ளதால் இக் கற்கை நெறியை கற்க விரும்பும் அனைத்து மாணவர்களையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு யாழ். பிராந்திய இணைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-27)

# முல்லைத்தீவிலிருந்து மூன்று தொகுதிகளாக கப்பலில் அழைத்துவரப்பட்ட மக்கள் தொகை ஆயிரத்து 212

## கடந்த திங்கட்கிழமை அழைத்து வரப்பட்டவர்களின் விபரமும் வெளியீடு

(திருகோணமலை)

முல்லைத்தீவிலிருந்து மூன்று தொகுதிகளாக கப்பலில் அழைத்து வரப்பட்ட ஆயிரத்து 212 பொதுமக்களில் திருகோணமலை பொது வைத் தியசாலையில் வைத்து 306 பேருக்கு அவசர சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

28 பேர் விசேட சத்திர சிகிச்சைக்காக கொழும்பு தேசிய ஆஸ்பத்திரிக்கும் கண்டி போதனா ஆஸ்பத்திரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் உள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கான நலன்புரி முகாங்களுக்கு திருகோணமலை ஆஸ்பத்திரிக்கு கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டவர்களில் கடந்த செவ்வாய்க்கிழமை வரை அனுப்பிவைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 218 ஆக அதி கரித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை வரையான நிலவரப்படி வெளிமாவட்டங்களி லுள்ள அரச ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வருமாறு,

கந்தளாய் ஆஸ்பத்திரி 84, தம்பலகாமம் 33, பொலனறுவை -86, திருகோணமலை ஆஸ்பத்திரி 678, திருமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரி-83,

இதேவேளை, முல்லைத்திவிலிருந்து சர்வதேசச் செஞ் சிலுவைச் சங்கத்தினரால் கப்பல் மூலம் அழைத்து வரப்பட்டு திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடந்த பெப்ரவரி 16 ஆம் திகதி இரவு அனுமதிக்கப்பட்டுள்ள காயமடைந் தவர்களின் பெயர், விபரங்கள் வருமாறு,

சுனிதா- குமுழமுனை, முல்லைத்தீவு (வயது 17), ஆர்.கமலாவதி- தாமரக்கேணி, முள்ளியவளை (வயது47), வி.ரஜனிகாந்த்- ஒடந்தன் குளம், முல்லைத்தீவு(வயது27), வி.பாலச்சந்திரன்-ஜமுனை ,சுழிபுரம் கிழக்கு, (வயது 47), சொக்கலிங்கம்- இரணைபாலை , முல்லைத்தீவு (வயது 58), சொக்கலிங்கம் பராசக்தி-தட்சணமருதானமடு (வயது56), மாரி- துணுக்காய், மல்லாவி (வயது37),

ஏ.மோகனசுதாகர்- உதயநகர் கிளிநொச்சி (வயது 23), கே.சிவபாக்கியம்- முளங்காவில்(வயது 74), ஷீபா-மல்லாவி, முல்லைத்தீவு (வயது33), ஜே.அபிலாஷி- மல்லாவி, முல்லைத்தீவு (வயது1) ஆர். புனிதமலர்-மல்லாவி, முல்லைத்தீவு (வயது 23), சுமிதா -அக்கராயன் குளம் (வயது21), யதுசன்- அக்கராயன் குளம் (வயது 25), கே.பிரதீபன்- (வயத09).

ஆர்.ஜெயலட்சுமி- பழை கிளிநொச்சி (வயது51), கே.த்னுசியா- விவேகானந்தா நகர்,கிளிநொச்சி (வயது 22), சுபாஜினி அன்ரனிராஜா -திருகோணமலை (வயது23), டினுசன்- திருகோணமலை (வயது05), டிலுசா- திருகோணமலை (வயது 02), கே.சுகதாஸ்- மல்லாவி, முல்லைத்தீவு (வயது23), பி.கதிரவேலு- மல்லாவி ,முல்லைத்தீவு (வயது75), பி.ஆனந்தன்- விசுவமடு(வயது 63), சி.சசிதரன்-தம்பிரா- பூநகரி (வயது20), ராமஜயலட்சுமி-ஆண்டான்குளம், அடம்பன் (வயது55), பி.லாவன்ஜா-முள்ளியவளை, முல்லைத்தீவு(வயது15), சிவகுமார்-யாழ்ப்பாணம்.

எம்.பத்மாதேவி-இராமநாதபுரம் (வயது 39), சிவானந்தசர்மா- பூநகரி (வயது35), பி.சுகந்தினி-மாமல்லபுரம் (வயது39), என்.சண்முகசுந்தரம்-புத்தூர், புளியங்குளம் (வயது51), ஏ.சாந்திலா- நடன்குடியிருப்பு, விஸ்வமடு (வயது51), பி.சிவன்ஞானம்- தம்பளை, கோணவில் (வயது55), எஸ்.இராஜகுமார்-பளை, கிளிநொச்சி (வயது 44), கே.நடராஜா- உருத்திரபுரம் ,கிளிநொச்சி, கலைவாணி- முள்ளியவளை, முல்லைத்தீவு(வயது 32), கிருஷ்ணகுமார்- வல்லியபுரம், புதுக்குடியிருப்பு (வயது30), சந்தியாமேரியோசப்- (வயது 65), ஜே.இராமச்சந்திரன்-மாசர்பளை (வயது64), யானுசன்- மாசர்பளை(வயது 05), ரி.ஜனரூபன்- நாட்டான்கண்டன் (வயது 34), யி.தர்சிகா- நாட்டான்கண்டன் (வயது 04), இராஜேஸ்வரி- இரணைபாலைன், முல்லைத்தீவு(வயது39).

ஏ.பார்வதி- பரந்தன், கிளிநொச்சி (வயது 61), டிலானி-பரந்தன், கிளிநொச்சி (வயது01), அருளானந்தன்- வட்டாரம் 9 புதுக்குடியிருப்பு (வயது67)ஏ.பிலோமினா-புதுக்குடியிருப்பு (வயது64), கே.தவராசா- திருநகர், கிளி நொச்சி (வயது 47), சுலக்ஷன்-ஆனந்தபுரம், கிளிநொச்சி (வயது12), எஸ்.சுபாகரன்-கிளிநொச்சி(வயது39), ரி.தண்டாயுதபாணி- வட்டுவடக்கு, சித்தன்கேணி(வயது74), செப மாலை- (வயது73), எம்.மைக்கல்ராஜ்- வலைமடு, முல்லைத்தீவு(வயது21).

என்.சுபைதா- செம்மலை, முல்லைத்தீவு (வயது30), காவியா- செம்மலை, முல்லைத் தீவு, வசந்தராணி- செம்மலை முல்லைத்தீவு (வயது32), எம்.கே. கேதீஸ்வரன்- பெரிய தம்பளை, வவுனியா( வயது52), சசிகலா- ஆனந்தபுரம், கிளிநொச்சி (வயது35), ரபேக்கா-மலையமடு (வயது20),ரவிக்குமார், ஆனந்தபுரம்,கிளிநொச்சி(வயது36), ஆர்.பால கிருஷ்ணா- விசுவமடு, முல்லைத்தீவு (வயது 63), லெனின்குமார்-முளங் காடு,கிளிநொச்சி (வயத33), எல்.விதுஷானி-(வயது11), கே.ஜோர்ஜர்-மாதலை, முல்லைத்தீவு (வயது43), நடிமலர்-வவுனிக் குளம், முல்லைத்தீவு (வயது 44),

எம்.மதுமிதன்-மாதலை, முல்லைத்தீவு, (வயது8), எம்.புஸ்பமலர்-மாதலை, முல்லைத் தீவு(வயது39) எல்.மைதிலி-மாதலை ,முல்லைத்தீவு(வயது33), விந்துயன்-மாதலை, முல்லைத்தீவு(வயது05), விழியரசு-மாதலை, முல்லைத்தீவு(வயது1 1/2), பி.பூசண், ஆள்காடி-மன்னார்(வயத63), ஜே.டேனோஜன்-யுனிற் 5, தர்மபுரம்(வயது15), எஸ்.நாகவர்த்தினி-பரந்தன்,கிளிநொச்சி (வயது 30), நாகவதனி-பரந்தன்,கிளிநொச்சி,(வயது25), என்.சிவகுமார்- பரந்தன்-கிளிநொச்சி (வயது36), எஸ்.குகஜனி-பரந்தன், கிளிநொச்சி (வயது05), ஏ.மரியநாயகம்- தர்மபுரம், யுனிர் 5 ,கிளிநொச்சி (வயது60), கே.கணேஸ்- வவுனிக் குளம் , முல்லைத்தீவு (வயது63).

ஆர்.நவசீலன்- தெல்லிப்பளை (வயது 31), லட்சுமி- இயக்கச்சி, கிளிநொச்சி (வயது 55), யோகேஸ்கந்தகன்-கப்பமடு, மன்னார் (வயது20), கே.தாரணி- பாலிநகர், வவுனிக் குளம்(வயது09), ஏ.ஜகராஜன்- மல்லாவி, பாலிநகர்(வயது40), பி.ஸ்ரீவன்னி- பாலை நகர், மல்லாவி(வயது43), பி.ரதிசியா- பாலை நகர்,மல்லாவி (வயது8), ஜே.கிவிதன்- பாலை நகர், மல்லாவி(வயது06), எம்.இராசம்மா, வவுனிக்குளம், முல்லைத்தீவு (வயது69), சி.பாஸ்கரன்- வட்டக்கந்தன், மன்னார் (வயது 33), ரி.மலர்விழி- கிளிநொச்சி (வயது 27).

ஆர்.தவசீலன்,மாதலை, முல்லைத்தீவு (வயது30), ரொபர்ட்ராஜா, பொக்கனை (வயது 30), பி.இராசம்மா, தேவிபுரம், (வயது 66), கிருபாகரன், இரத்தினபுரம், கிளிநொச்சி (வயது26).

எஸ். நடராஜன்-28, விவேகானந்தர் நகர் மேற்கு, கிளிநொச்சி (வயது 52), ரி.தியாகலிங்கம்- நடக்கண்டல் ,மாங்குளம் (வயது 50), கே.ராமாஜி-தர்மபுரம் (வயது71), புண்ணியவதி,தேவிபுரம், (வயது58), ஜே.அனிலவன்-தேவிபுரம்(வயது11/2) ,ஜே.வாணி- தேவி புரம், புதுக்குடியிருப்பு, (வயது32), ஆர்.ஜனனி- தேவிபுரம், புதுக்குடி யிருப்பு- (வயது6), ஆர். ராஜிதா- தேவிபுரம், புதுக்குடியிருப்பு, (வயது26), எம்.மாரியப்பன்-156 மைல் ,கிளி நொச்சி (வயது63), கவில்தாஸ்- கல்வலி, புதுக்குடியிருப்பு (வயது10), குமாரதாஸ்- கல் வலி, புதுக்குடியிருப்பு (வயது41), ரி.வடிவேலு, 4047 ஆவது ஒழுங்கை தர்மபுரம் ,(வயது 77), ஜோக ராஜ்- மாதலை, முல்லைத்தீவு ,(வயது55), கார்த்திகா-வல்லாங் குளம்,முல் லைத்தீவு, (வயது 21), ஜெயராணி-முல் லைத்தீவு, (வயது50), கே.பிரதீபா- தேவி புரம், முல்லைத்தீவு , (வயது 18), கே.ராஜேஸ் வரி, எம்.லட்சுமி- கிளிநொச்சி,(வயது58), எஸ்.கசிகரன்-வித்தியாபுரம்,ஒட்டிசுட்டான், (வயது 7), எஸ்.சிவகெளரி- வித்தியாபுரம், ஒட்டிசுட்டான் ,(வயது32, சாம்பவி,(வயது7), வி.சரஸ்வதி-தேவிபுரம், முல் லைத்தீவு, வயது23 ), நித்திரன் மாதலை, முல்லைத்தீவு (வயது11), கே.பர மேஸ்வரி - (வயது59), ஏபுவி யரசன்-பூக் காணல் , கிளிநொச்சி, எம்.புஸ்பவதி- கிளி நொச்சி, (வயது 58), ஐ.தம்பிராஜ்- தர்மபுரம், (வயது 53), வி.இராசையா-கிளி நொச்சி, (வயது 60), அபிஹுதன்- மாதலை,முல்லைத்தீவு, (வயது34).



முல்லைத்தீவில் இருந்து 3ஆவது தொகுதியாக திருகோணமலை வைத்திய சாலைக்கு அழைத்துவரப்பட்ட சிறுமி ஒருவருக்கு சிகிச்சை அளிக்கப் படுவதைப் படத்தில் காணலாம்.

கே.அபிராஜ்-மாதலை, முல்லைத்தீவு (வயது5), அபிசங் கர்-மாதலை, முல்லைத் தீவு ,(வயது3), வி.பவளம்- மாதலை, முல் லைத்தீவு, (வயது68), கே.வசந்தகுமார்- மாதலை, முல்லைத்தீவு (வயது 34), ஏ.வேலாயு தம்,புதுக்குடியிருப்பு, முல்லைத் தீவு (வயது73), செபஸ்தியன் , குரூஸ் ,மன்னார் ,(வயது45).

வை.சுரேந்திரன்-சாவகச்சேரி, (வயது 29), ஹேமா,137,கொக்கன அடக்காடு, முல் லைத்தீவு , (வயது25), பிரிதா-137, கொக்கன, அடக்காடு,முல்லைத்தீவு,(வயது21/2), ஆர்.சுதீஸ் வரன்-கொக்கன அடக்காடு, முல் லைத்தீவு, (வயது28),கே.கிரிசாந்தன்-கொக்கன அடக்காடு, முல்லைத்தீவு, (வயது13), சுரேந்தினி- கொக்கன, அடக்காடு, முல் லைத்தீவு, (வயது3), கே.பரசாவதி-141,(வயது 38), கே.சுரேந்திரன் ,உடையார் கட்டு தெற்கு, முல்லைத்தீவு, (வயது7), எஸ்.நிர் மலா தேவி- மாதலை, முல்லைத்தீவு, (வயது37), கம்சியா- மாதலை, முல்லைத்தீவு, (வயது4), கே.ரவீந்திரன்- மட்டுவில் மேற்கு, பூநகரி, (வயது52),ஏ.நவரசி- கிளிநொச்சி,(வயது33).

கே.தமிழ்ச் செல்வி - கிளிநொச்சி, (வயது7), கே.தமிழ்ப் பிரியன்- கிளி நொச்சி ,(வயது3) எ்ஸ்.சிவசந்தியா, புதுக் குடியிருப்பு, முல் லைத்தீவு, (வயது9), எஸ்.தர்சினி-புதுக்குடியிருப்பு முல்லைத் தீவு (வயது2), எஸ்.கௌசலாதேவி-புதுக் குடியி ருப்பு,முல்லைத்தீவு, (வயது 28).

எஸ். தரன் - புதுக்குடியிருப்பு, முல்லைத் தீவு (வயது 2), பொன்னையா - மல்லாவி, முல்லைத்தீவு (வயது 68), எ்ஸ். ராணி - கிளிநொச்சி (வயது 29), துஷாந்தி - கிளிநொச்சி (வயது 20), எஸ். சகுந்தலாதேவி - முல் லைத்தீவு (வயது 55), எஸ். சந்திரன் - கோணாவில் (வயது 39), எஸ். சிவனேசன் - அலம்பில், முல்லைத்தீவு (வயது 32).

கேதுஷன் - இரணைபாலை, (வயது 07), ஐ. சு. தர்ஷினி -இரணைபாலை (வயது 8), திலகமலர்- இரணைப்பாலை (வயது 38)ஐ. சங்கீதா - இரணைபாலை, (வயது 5), நந்தினி, எஸ். ஜயவதனி - வல்வராயக் கட்டு, கிளிநொச்சி (வயது 29), வி. பாலசிங் கம் - புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு (வயது 23).

பி. தனுஷ் - புதுக்குடியிருப்பு (வயது 4), பி. தனுஷியா - புதுக்குடியிருப்பு (வயது 2½) என். தவமணி - மாதலை, முல்லைத்தீவு (வயது 60), கம்ஸன் - மாதலை, முல்லைத் தீவு, என் பிரபாகரன் - பொக்கன அடைக் காடு, முல்லைத்தீவு (வயது 30), என் சுகுந்திரன் - 7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு (வயது 34), எஸ். நவரஸ்யன் - 7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு (வயது 1), கே. சுரேந்திரன் - பொக்கணை (வயது 28), வி. இலங்கநாதன் - தெல்லிப்பளை (வயது 38), எஸ். துவாரகன், 170...(வயது -04), எஸ். தர்சியன் - 170...(வயது 06).

எஸ். துஷாந்தி- 170... (வயது32), ரஞ்சியா வதனி- இரணைபாலை, முல்லைத் தீவு, (வயது 29), வி. நிஸாந்தன் - இரணைபாலை, முல்லைத்தீவு (வயது 03), அபிநயா - வட்டக்கச்சி, கிளிநொச்சி, (வயது 08), புஹாரி உம்மா - வட்டக்கச்சி, கிளிநொச்சி (வயது 28), அபிர்தா - வட்டக்கச்சி, கிளிநொச்சி, (வயது 06), இணுநிலா - வட்டக்கச்சி, கிளிநொச்சி, (வயது 2 ½) , என். கமலாபூரணம் - இராமநாதபுரம், எம்.சஹாநந்தி - இராமநாதபுரம், (வயது 34), எஸ். புஷ்பமலர் - முல் லைத்தீவு, (வயது27), ஹம்சிகா - முல் லைத்தீவு, (வயது01),

தேனஹா - புதுக்குடியிருப்பு, (வயது40), ஆர் உதயராஜ் - ஆனந்தபுரம், கிளிநொச்சி, (வயது 24), எஸ். ராஜசெல்வி- கிளிநொச்சி, (வயது 40), எஸ். சுஜாதா - கிளிநொச்சி, (வயது08), எஸ். விஜிதா - கிளிநொச்சி, (வயது09), எஸ் சைஜா - கிளிநொச்சி, (வயது 04), கிருஷ்ணதேவி - கிளிநொச்சி, (வயது 61), புலா - யாழ்ப்பாணம், (வயது03), அனுசியா - யாழ்ப்பாணம், (வயது 29), எஸ்.உனேஷிகா - யாழ்ப்பாணம், (வயது 06), எம்.பத்மதேவி - பொக்கனை, கிளிநொச்சி, (வயது 50)

ஷியாந்தன்- பொக்கணை, கிளிநொச்சி (வயது 2), பி. விஜிதா - மாதலை - முல்லைத் தீவு, (வயது 28), கவிசனா - மாதலை, முல் லைத்தீவு (வயது 2), கவிராஜ் - மாதலை, முல் லைத்தீவு (வயது 8), கவிசாளினி - மாதலை, முல்லைத்தீவு (வயது 6), ஐ. சந்திரன் - 4ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு (வயது 68), கமலநாதன் - கிளி நொச்சி (வயது 54), கே. பிரவீணா - இராமநாதபுரம், கிளிநொச்சி, (வயது 25), கே. அலிசான் - கிளிநொச்சி (வயது 2½)

கே. ஜே. கைலநாதன் - இராமநாதபுரம், கிளிநொச்சி, (வயது 56), எஸ். டினேசாந்தன் - பல்லவராயன் கட்டு, கிளிநொச்சி (வயது 31), எஸ். சறோஜினிதேவி - கிளிநொச்சி (வயது 25), செல்வராஜ் - கிளிநொச்சி, உத்தகுளம் (வயது 25), கம்சிகா - உத்தகுளம், கிளிநொச்சி (வயது 1), ஜங்கரன் - கிளிநொச்சி (வயது 33), கே. சுகன்யா - கிளிநொச்சி, (வயது 27), கௌரீசன் - கிளிநொச்சி (வயது 5), கதிரினியா - கிளிநொச்சி (வயது 7), ரம் லாதேவி - கிளிநொச்சி (வயது 31), அபிநயன் - கிளிநொச்சி (வயது 8), எஸ். மகிந்தன் - கிளி நொச்சி (வயது 8), எஸ். மாதவி - கிளிநொச்சி (வயது 10).

# வன்னியில் பொதுமக்கள் வாழும் பிரதேசங்களில் வான், எறிகணைத்தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்

## த.வி.கூ. தலைவர் ஆனந்தசங்கரி ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

வன்னியில் பொதுமக்கள் பிரதேசங்கள் மீது நடத்தப்பட்டு வரும் வான் மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்படும் பொது மக்களின் எண்ணிக்கை நாள்தோறும் உயர்வடைந்து செல்லும் துயர நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.




மானிப்பாய் பரிஷ் லயன்ஸ்கழத்தினால் சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையத்தில் வைத்து இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

சனசமூக நிலைய உறுப்பினர் எஸ்.ஜெயவிந்தன் பயனாளி ஒருவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்குவதையும், அருகில் மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழக தலைவர் லயன் டாக்டர் இ.சாந்தன், கழக உறுப்பினர் லயன் எஸ்.இராஜசூரி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

இரண்டு சமூகங்களுக்குமிடையிலும் பிளவை ஏற்படுத்தும் எண்ணம் தமக்கு ஒரு போதும் ஏற்பட்டதில்லை எனவும் வன்னிப் பிரதேச மக்களின் அவல நிலை பெரிதும் வேதனையளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களவரோ, தமிழரோ அல்லது முஸ்லிம்களோ உயிர் என்பது யவருக்கும் மிகவும் விலைமதிப்பற்றதொன்றாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான உக்கிர யுத்த சூழ்நிலையில் படைவீரர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் மிகத் துல்லியமாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியாது என்ற போதிலும் பொதுமக்கள் பாதுகாப்பிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

என்ன விலை கொடுத்தேனும் அப்பாவி பொதுமக்களை காப்பாற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வாரத்தில் மட்டும் 288 பேர் உயிரிழந்திருப்பதுடன் 766 பேர் காயமடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மட்டும் 55 பேர் உயிரிழந்ததுடன் 109 பேர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறான நிலைமைகளின் காரணமாக மனிதாபிமான மீட்புப் பணிகளை மேற்கொள்ளும் அரசாங்க இராணுவத்தின் நற்பெயருக்கு அபகீர்த்தி ஏற்படக் கூடும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஓ-6)

## 2000ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பாதுகாப்பு செலவினம் ரூ.774 பில்லியன்

கடந்த 2000ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரையிலுமான காலப்பகுதியில் இலங்கை அரசு 774 பில்லியன் ரூபாய்களை படையினருக்கு செலவிட்டுள்ளதாக உள்துறை நிர்வாக அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, 2000ஆம் ஆண்டில் இருந்து இன்று வரையிலும் 592 பில்லியன் ரூபாய்கள் இராணுவத்திற்கும் 91 பில்லியன் ரூபாய்கள் வான் படையினருக்கும் 49 பில்லியன் ரூபாய்கள் காவல்துறையினருக்கும் 32 பில்லியன் ரூபாய்கள் கடற்படையினருக்கும் செலவிடப்பட்டுள்ளன. ஏ-32 மற்றும் ஏ-9 நெடுஞ்சாலைகளை புனரமைக்கும் பணிகளையும் அரசு மேற்கொண்டுவருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## கப்பல் கழிவெண்ணையால் கடல் மாசடைவதை தடுக்க நடவடிக்கை

இலங்கை கடற்பரப்பில் கப்பல்களில் இருந்து கசியும் உலை எண்ணெயினால் சமுத்திரம் மாசடைவதைத் தடுக்க சமுத்திரவள பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்து வருகிறது. இலங்கைக்கு வருகை தரும் கப்பல்கள் மற்றும் இலங்கைக்கு சொந்தமான கடல் எல்லைக் குள் பிரவேசிக்கும் கப்பல்கள் ஆகியவற்றில் இருந்து கசியும் உலை எண்ணெய்க் கழிவு களை உறிஞ்சி எடுப்பதற்கான இயந்திரம் ஒன்று கடற்பரப்பில் பொருத்தப்படவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் குலரத்தின தெரிவித்துள்ளார்.

இந்த இயந்திரத்தின் மூலம் உறிஞ்சப் படும் உலை எண்ணெய் கழிவுகளை கொண்டு மின் உற்பத்தி உட்பட பல்வேறு திட்டங்களை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ஓ-6)

## கேள்வி கோரல்
## இலங்கை மின்சார சபை

| 1<br>பிராந்தியம்/ மாகாணம் | 2<br>கேள்வி இல, விபரமும் அளவையும் | 3<br>கேள்வி முடிவுத் திகதி , நேரம் | 4<br>கொள்வனவு குழு | 5<br>கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ளும் அலுவலகம், தொலைபேசி இல | 6<br>கேள்வி பத்திரத்தின் விலை | 7<br>கேள்விப்பத்திரம் ஒப்படைக்க வேண்டிய அலுவலகம் | 8<br>கேள்வி திறக்கும் இடம் | 9<br>தகவல் பிரதியின் விலை | 10<br>கேள்வியின் வகை ICB/ NCB |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மூலப்பொருட்கள்** | | | | | | | | | |
| பி.பொ.மு. (வ) | என்பி/டிஜிஎம்/2009 / 01 வழங்குநர்களை பதிவு செய்தல்-2009 பொருட்கள் 1.சீமெந்திலான மின் கம்பங்கள் 2.மின் விநியோகத்துடன் தொடர்புடைய மின் மூலப் பொருட்கள் (Electrical materials | 19.03.2009 2 Pm | மாகாண கொள்வனவு குழு (வடக்கு) | பிரதி பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலகம் இலங்கை மின்சார சபை, 500 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். | 1, 000.00 | பி.பொ மு (வ) அலுவலகம் 500 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | பி பொ மு (வ), அலுவலகம் 500 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | - | NCB |
| **சேவைகள்** | | | | | | | | | |
| பி.பொ.மு. (வ) | என்பி/டிஜிஎம்/2009/ 01 வழங்குநர்களை பதிவு செய்தல் -2009 சேவைகள் தாழ்நிலை(LT), உயர் நிலை (HT), மற்றும் உப நிலையம் (Substation)அமைக்கும் வேலைகள் | 19.03.2009 2 Pm | மாகாண கொள்வனவு குழு (வடக்கு) | பிரதி பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலகம் இலங்கை மின்சார சபை, 500 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். | 1, 000.00 | பி.பொ மு (வ) அலுவலகம் 500 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | பி பொ மு (வ), அலுவலகம் 500 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | - | NCB |

இலங்கை மின்சார சபையின் கொள்வனவு குழுத் தலைவர் (வடமாகாணம்) தகுந்த வழங்குனர்களிடமிருந்து மேற்கூறப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளிற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார். ஒவ்வொரு பொருள் மற்றும் சேவைக்குரிய கேள்வி இலங்கை மின்சார சபையிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கேள்வி பத்திரங்களில் மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வி பத்திரங்கள் தகுந்த கேள்விதாரர் அல்லது அவரின் அனுமதி பெற்ற முகவருக்கே வழங்கப்படும். கேள்வி பத்திரங்கள் உரிய கேள்விதாரர் அல்லது அவரின் அனுமதி பெற்ற முகவர் கொள்வனவு செய்யும் போது மேலுள்ள அட்டவணையில் 6ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகையை செலுத்துவதுடன் எழுத்து மூலமாக வேண்டுகோளை பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு) அவர்களிடம் வழங்கி கேள்வி பத்திரத்தை 0900 -1500 மணித்தியா லங்களுக்கிடையில் பெற்றுக்கொள்ள முடியும். கேள்வி பத்திரங்கள் அவற்றிற்கான முடிவு நேரம் முடிந்தவுடன் கேள்விதாரர்களின் பிரசன்னத்தில் உடனடியாக நிரல் 8இல் கூறப்பட்ட இடத்தில் திறக்கப்படும். தாமதமான கேள்விகள் பிரதிப் பொது முகாமையாளரினால் நிராகரிக்கப்படும் கேள்விகள் தொடர்பான விசாரணைகள் யாவும் கேள்வி முடிவுத் திகதியிலிருந்து 2 வார கால பகுதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
மாகாண கொள்வனவுக் குழு,
(வடமாகாணம்)

(சி/2134)

"சூழல் அபிவிருத்தி வேலைகளிற்கு கை கொடுக்கும்"
இலங்கை மின்சாரசபை

மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் –என்பதைக் காட்டுவது துன்பங்களே.

– கிரீஸ்

வலம்புரி

## உயிர் பறிக்கும் பாவபழி எல்லோருக்கும் பங்கிடப்படும்

இலங்கைத் திருநாட்டின் ஒரு பகுதியில் அப்பாவி மக்கள் தினமும் பலியாகிக் கொண்டிருக்கின்றனர்.

இனத்தின் –மதத்தின் –மொழியின் பேரால் நடக்கும் இந்தப் பெருங்கொடூரம் தடுத்து நிறுத்தப்படவேண்டும். இல்லையேல் பல்லாயிரக் கணக்கான மனித உயிர்களை கொலை செய்த பாவத்தை இந்த நாடு தாங்கிக் கொள்வதுடன், அந்தப் பழிபாவமும் இந்த நாட்டைச் சூழ்ந்து கொள்ளும்.

மனித நாகரிகம் மிக உச்சமடைந்த இந்தக் காலகட்டத்தில் –விஞ்ஞானத் தகவல் தொழில் நுட்பத்தின் உச்ச நிலையில், மனிதப் பேரவலம் நடந்துகொண்டிருக்கும்போது அதனைத் தடுத்து நிறுத்த ஒருவராலுமே முடியவில்லையெனில் இதனை விட வேதனை வேறு எதுவும் இருக்க முடியாது.

பௌத்த நாடு என்று இலங்கையைக் கூறும் போது அங்கு மனித வதை என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போகின்றது.

அதேநேரம் போர்த் தர்மம் அப்பாவிப் பொது மக்களை பாதுகாப்பதை வலியுறுத்துகின்றது. ஆனால் இவை எதுவுமே மனச்சாட்சிக்குப் படாமல் மனிதப் படுகொலைகள் நடந்தவண்ணமுள்ளன.

உலக நாடுகள் எம்மைப் பாதுகாக்கும் என்ற நினைப்பெல்லாம் வெறும் பிரமை. ஐ.நா. சபை, அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா எல்லாமே சுயநலத்தின் சார்புடையவை.

எனவே அந்த அமைப்புகளும் –நாடுகளும் அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கைகளைத் தூக்கி எறிந்துவிட்டு நாம் இந்த நாட்டின் எல்லைகளுக்குள் நின்று இந்த நாட்டின் பிரஜைகள் கொல்லப்படுவது குறித்து ஒருகணம் சிந்தித்தால் போதும் அந்த மா பாவம் நின்று போகும்.

உயிரைக் காப்பாற்ற குழந்தை குஞ்சுகளுடன் ஓடித்திரியும் மரண பயம் ஓயும். ஜனாதிபதி, அரசு,எதிர்க்கட்சிகள், சிங்கள, தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள், தமிழ் அமைப்புகள் என எல்லோருமே ஒருகணம் ஒன்று சேர்ந்து வாழத் துடிக்கும் அப்பாவிப் பொதுமக்களுக்கு வாழும் உரிமையைக் கொடுத்தால் என்ன?

இது விடயத்தில் தென்னிலங்கை அரசியல் கட்சிகள், தமிழ், முஸ்லிம் தரப்புகள் மௌனம் காப்பது ஏன்? நீதியை, ஜனநாயக வழியை எடுத்துக் கூறவேண்டிய ஊடகங்கள் தங்கள் பொறுப்பை மறந்து மௌனித்திருப்பது எதற்காக?

நாள்தோறும் இறந்துபோகும் அந்த மக்களிடத்தில் எந்த இரக்கமும் எவரிடமும் ஏற்படவில்லையா? அல்லது அதுதான் நியதியென்று முடிவு எடுத்தாயிற்றா?

எதுவாயினும் ஒன்றுமட்டும் உண்மை. இந்த யுத்தத்தில் உயிரிழந்த அப்பாவிகளின் சாபம், பாவம், பழி அத்தனையும் இந்த நாட்டின் உயிரோடு இருக்கும் தலைகளுக்கு பங்கிடப்படும்.

அந்தப் பங்கை வேண்டாம் என்று யார் மறுத்தாலும் உயிரழிவைத் தடுக்க நீங்கள் என்ன செய்தீர் என்ற கேள்வியை இறைவன் கேட்பான். அந்தக் கேள்வி எங்கள் நெஞ்சைப் பிய்த்துக் கொள்ளும்போது கூடவே பாவபழியும் நுழைந்து கொள்ளும்.

# பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்கும்

## அமைச்சர் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

பொதுத் தேர்தலொன்று நடத்தப்படுமானால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கும். இதன் மூலம் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு தேர்தல் முறையும் மாற்றியமைக்கப்படும். சுயாதீன தேர்தல் ஆணைக்குழு இல்லாத போதும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலைய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்தும் கூறியதாவது,


சர்வாதிகார ஆட்சியை முன்னெடுப்பதற்காக அரசாங்கம் தேர்தல்களை நடத்தவில்லை. ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே தேர்தல்களை நடத்துகின்றது. அது நடத்தப்படாவிட்டால்தான் சர்வாதிகாரமென அர்த்தப்படுத்தலாம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகளை மக்கள் ஆதரிக்கின்றனர்.

வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணியாது விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளும் யுத்தத்தை மக்கள் ஆதரிக்கின்றனர். மக்கள் செல்வாக்கு எமக்கே உண்டு.

தற்போதைய சூழ்நிலையில் பொதுத் தேர்தலை நடத்தினால் அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைப்பது உறுதி. அவ்வாறான பெரும்பான்மை கிடைத்தால் பிரச்சினைகளை தோற்றுவிக்கும் அரசியலமைப்பை மாற்றி தேர்தல் முறையில் மாற்றத்தை கொண்டு வருவோம்.

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு நியமிக்கப்படாமலேயே நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களை நடத்திக் காண்பித்துளோம்.



தேர்தல்கள் ஆணையாளர் தனது அதிகாரத்தை பிரயோகித்து புத்தளத்தில் ஒரு வாக்குச் சாவடி வாக்களிப்பை தடைசெய்து மீண்டும் தேர்தலை நடத்தவுள்ளார். அரசியல் கட்சிகள் ஒழுக்கத்தை கடைப் பிடித்தால் சுமுகமான தேர்தல்களை நடத்த முடியும்.

இது சுயாதீன தேர்தல்கள் ஆணை க்குழு அமைக்கப் படலாகாது என அர்த்தப் படாது.

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு இல்லாவிட்டாலும் தேர்தல்கள் ஆணையாளர் தனது அதிகாரங்களை பிரயோகிக்கத்தான் செய்கிறார்.

தேர்தல்கள் ஆணையாளர் ஓய்வுபெறுவதற்காகவே சுயாதீன தேர்தல்கள்ஆணைக்குழு தேவைப்படுகிறது. (ஓ-6)

## சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சை முடிவுகள் மற்றும் வாகனப் பரிசோதனை

யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் தைமாதம் 27,28,29,30 மாசி மாதம்03.10 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந் தவர்களுக்கு செயன் முறைப் பரீ ட்சை கீழ்க் குறிப்பிடப்படும் ஒழுங் கில் நடைபெறும்.

அத்துடன் செயன்முறைப் பரீட் சைக்கான திகதி வழங்கல் மற்றும் புதிய மோட்டார் சைக்கிள் பதிவுக் கான வாகனப் பரிசோதனை என் பன நாளை வியாழக்கிழமை தொட க்கம் நடைபெற உள்ளதாக யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கு செயன் முறைப் பரீட்சை நடைபெறும் திகதிகள் வருமாறு,

2009.01.27 - 20.02.2009 மு.ப 9.30 மணி, 2009.01.28 - 20.02.2009 மு.ப. 9.30 மணி, 2009.01.29 - 21.02.2009 மு.ப. 9.30 மணி, 2009.01.30 - 21.02. 2009 மு.ப 9.30 மணி, 2009. 02.03 - 23.02.2009 மு.ப. 9.30 மணி, 2009.02.10 - 23.02. 2009 மு.ப 9.30 மணி. (ஓ)

## ஆதன வரி செலுத்தாதவர்கள் மீது யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் ஆதன வரி செலுத்தாதவர்கள் மீது யாழ். நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக ஆதன வரி செலுத்தாதவர்கள் மீது யாழ். நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டப் பணம் அறவிடப்பட்ட போதும் இம்முறை இரண்டாம் கட்டமாக 20 பேருக்கு யாழ். நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் ஆதனவரி செலுத்தாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நல்லூர் பிரதேச சபை செயலாளர் மேரி. ஜோசப் சாந்தசீலன் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## மெய்வல்லுநர் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2மணிக்கு சாவக ச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி. சி. கந்தசாமி தலைமையில் நடைபெறும். மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் வி.பரந்தாமன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ. கயிலாயபிள்ளை ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் யாழ். திரு. முத்துத்தம்பி ம.வி. பிரதி அதிபர் திருமதி கௌரி பரந்தாமன் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். (ஓ-29)

# நாம் கடவுளை நோக்கி கூப்பிடும் வரை அவர் நமக்காக காத்திருக்கின்றார்-பாபா

ஒருமுறை கிருஷ்ணரிடம் குந்திதேவி தனக்கு தொடர்ந்தும் துன்பங்களையே தருமாறு வேண்டினாள். கிருஷ்ணரை எப்போதும் நினைத்திருக்கவென்று கூறினாள். "கிருஷ்ணா! என் கணவர் பாண்டு இருக்கும் போது நான் உன்னை நினைக்கவேயில்லை. ஏனெனில் முழுமையும் நான் மகிழ்ச்சியிலும் சுக சௌக்கியங்களிலும் ஆழ்ந்திருந்தேன். அவரது மறைவிற்கு பிறகு சொல்லொணாத கஷ்டங்களை அனுபவித்தேன். அதனால் உன்னையே நினைத்திருந்தேன். இப்போது கஸ்டங்களின் மதிப்பை இப்போது புரிந்து கொள்ள முடிகிறது. உன்னை இடைவிடாமல் நினைத்திருக்க அவை உதவுகின்றன. நான் எவ்வளவு துன்பத்தையும் எதிர்கொள்ளத் தயார். ஆனால் உன் மேல் வைத்திருக்கும் அன்பு குறையாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள உறுதி கொடு" என்றார்.



சுயநலத்துடன் கூடிய வாழ்க்கை வாழ்வதற்கு இறைவன் எங்களைப் படைக்கவில்லை. எங்கள் வாழ்வின் உயர்விற்காக, இறைவனின் அரவணைப்பிற்காக தர்மத்தை உயர்ந்த இடத்தில் வையுங்கள். உயிருக்கே ஆபத்தானாலும் கூட தர்மம் உயர்த்திப் போற்றப்பட வேண்டும். எல்லாம் இறைவனது சங்கல்பத்தினால் மட்டுமே நடை பெறுகின்றது. இறை சங்கல்பத்தால் உருவான மனிதன் இறைக் கட்டளையை பின்பற்றி நடந்து எமது வாழ்க்கையை புனிதமாக்கிக் கொள்ள வேண்டும். யார் என்ன சொன்னாலும், செய்தாலும் சரி இறைவன் மீது அசையாத நம்பிக்கை வைக்க வேண்டும். நல்லவர்களுக்குத்தான் வாழ்க்கைப் பாதையில் நிறைய இடைஞ்சல்கள் ஏற்படும். ஆனால், எது நடந்தாலும் அது எமது நன்மைக்காகவே ஏற்படுகின்றது. எனவே இறை நம்பிக்கையை இழந்துவிடக் கூடாது. இன்பம் என்பது இரண்டு துன்பங்களிற் கிடையேயுள்ள இடைவெளி.

மனிதன் இவ்வுலகில் எத்தனையோ சவால்களுக்கு முகங்கொடுக்கிறான். வாழ்வைப் போராட்டமாய்ப் பார்க்கிறான். தன்னால் ஏதோ முடியுமென்று முயற்சி செய்கிறான். இறை சங்கலப்பத்தால் வாழ்வில் துன்பமில்லாது நான்கு வகை சுகமும்

**ஜெய் சாயிராம்**

கூட நான் என்ற ஆணவம் தலைக்கேற சகலதும் தான் என்ற எண்ணம் உதயமாகிறது. அழிவின் விளிம்பு அவனை எட்டிப் பார்க்கிறது. நோய், துன்பங்கள் வாட்டி வதைக்கின்றன. முயற்சியின் முடிவிலோ தோல்வி. இப்போது இறைவன் தான் எம்மைக் காப்பாற்ற வேண்டும். எவ்வளவோ ,காலத்தை கடவுளை நினையாமலே தொலைத்து விட்டோம். இப்போது நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறோம். நாம் கடவுளை நோக்கிக் கூப்பிடும் வரை அவர் நமக்காக காத்திருக்கின்றார். உள்ளத்திலே ஊற்றெடுத்த ஒரு சொல் கடவுள் அவர்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்.

*யாதவன்*

# தமிழினப் படுகொலையைக் கண்டித்து கறுப்புத் துணி கட்டி போராட்டம்

## அனைத்து கல்லூரி மாணவர்கள் கூட்டமைப்பு அறிவிப்பு

ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்து இன்று அனைத்துக் கல்லூரிய மற்றும் பல்கலைக்கழகங்களின் நுழைவாயில் முன்பாக கறுப்புத்துணி கட்டி முழக்கப் போராட்டம் நடத்தப்போவதாக அனைத்துக் கல்லூரி மாணவர் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

சென்னையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஊடகவியலாளர்களிடம் உரையாற்றிய அனைத்துக் கல்லூரி மாணவர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வெங்கடாசலம், அனைத்து இந்திய மாணவர் தெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் திருமலை, தமிழக மாணவர் சங்கத்தின் இணைச் செயலாளர் செஞ்சிரவி ,புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியின் தலைவர் கணேசன் உட்பட பல்வேறு மாணவர் அமைப்பின் பேராளர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இலங்கையில் தமிழினப் படுகொலை தீவிரமாகியுள்ளது.

இதனால் ஆயிரக்கணக்கான பெண்கள், குழந்தைகள் நாள்தோறும் இறந்து வருகின்றனர்.

இந்த அழிவிலிருந்து தமிழ் மக்களைக் காக்கவும், அங்கு போர் நிறுத்தம் கொண்டு வரவும் இலங்கைக்கு வழங்கி வரும் ஆயுத உதவிகளை இந்திய அரசு உடனடியாக திரும்பப் பெற வலியுறுத்தி இன்று அனைத்துக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு முன்பு கறுப்புத் துணி கட்டி வாயில் முழக்க போராட்டம் நடத்தப் போவதாகவும் இன்று அனைத்து நாட்டு தூதரக அதிகாரிகளை நேரில் சந்தித்து மனுக் கொடுத்து இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பளிக்க ஆதரவு திரட்டவுள்ளோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

நாளை அனைத்து மாவட்ட தலை நகரங்களில் உள்ள மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் நோக்கி மாபெரும் பேரணி நடத்தவுள்ளோம்.

இந்தப் பேரணியில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அனைத்து உலக போர்க் குற்றவாளியாக இந்தப் பேரணி வலியுறுத்தவுள்ளதாக அனைத்துக் கல்லூரி மாணவர் கூட்டமைப்பு நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-6)




செல்லகுட்டியை வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா
அப்பப்பா, அப்பம்மா
பெரியம்மா குடும்பம்
செல்வி அத்தை குடும்பம்
காண்டி மாமா குடும்பம்
ஜீவி அத்தை குடும்பம்
UNIT
(2266)

# வழக்கறிஞர்களின் தொடர் போராட்டத்தினால் உயர் நீதிமன்ற விசாரணைகள் பாதிப்பு

(சென்னை)

ஈழத்தில் இனப் படுகொலையைக் கண்டித்து சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உண்ணா நிலைப் போராட்டம் நடத்தினர்.

வழக்கறிஞர்கள் போராட்டத்தால் சென்னை உயர் நீதிமன்றப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இலங்கை இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்தக் கோரி சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் கடந்தமாதம் முதல் நாள் தோறும் ஒரு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இப் போராட்டத்தின் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் சமூக நீதி வழக்கறிஞர்கள் பேரவையின் சார்பில் உண்ணாநிலைப் போராட்டம் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் பாலு தலைமையில் நடைபெற்ற இப் போராட்டத்தில் ஏராளமான வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர். இப் போராட்டத்தின் போது இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செய்திகளை வெளியிட்டு வரும் ஊடகங்களையும் வட இந்திய தொலைக் காட்சிகளையும் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

தமிழர்களுக்கு எதிராக தொடர்ந்து செய்தி வெளியிட்டுவரும் தினமலர் நாளிதழை வழக்கறிஞர்கள் தீயிட்டு எரித்தனர். மேலும் இலங்கையில் வாழும் அப்பாவித்தமிழர்களை சிங்களப் படையினர் தாக்குதல் நடத்தி வருவதால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த நிழற்படங்களும் இந்த உண்ணா நிலைப் போராட்டத்தில் வைக்கப்பட்டிருந்தன. (ஓ-6)

# சபரிமலை சென்ற பஸ் எருமேலி அருகே கவிழ்ந்ததில் 12 ஆந்திர பக்தர்கள் பலி



(எருமேலி)

சபரிமலை சென்ற பஸ் எருமேலி அருகே 50 அடி பள்ளத்தில் கவிழ்ந்ததில் 10 பெண்கள் உட்பட 12 ஆந்திர பக்தர்கள் இறந்தனர்.

ஆந்திரா மேற்கு கோதாவரி மாவட்டத்திலிருந்து பக்தர்கள் 61 பேர் மாசி மாத பூஜையில் சாமி கும்பிட சபரிமலைக்கு பஸ்சில் வந்து கொண்டிருந்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணிக்கு எருமேலி அருகே பம்பா வாலி என்ற இடத்தில் பனி மூட்டம் அதிகம் இருந்ததால் சாரதியால் பாதையை சரியாக கணிக்க முடியவில்லை. பஸ் வள்ளவில் திரும்பிய போது பக்கத்தில் உள்ள 50 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது.


பக்தர்கள் உதவி கேட்டு கூச்சலிட்டனர். அதிகாலை நேரம் மற்றும் காட்டுப்பகுதி என்பதால் உதவிக்கு யாரும் வரவில்லை. சிறிதுநேரம் கழித்து தான் விபத்து நடந்த இடத்துக்கு சிலர் வந்தனர்.

பின் பொலிஸார் வந்து உள்ளூர் மக்களின் உதவியுடன் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். விபத்தில் பஸ் முழுமையாக சேதமடைந்திருந்தது. பஸ்சுக்குள் சிக்கியவர்களை மீட்டு கோட்டயம் மருத்துவமனையில் சேர்த்தனர். பனியும், வெளிச்சமின்மையும் மீட்புப் பணியில் பாதிப்பை ஏற்படுத்தியது.

10 பெண்கள் உட்பட 12 பேர் இந்த விபத்தில் இறந்தனர். 42 பேர் படுகாயங்களுடன் கோட்டயம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் நான்கு பேர் நிலை கவலைக்கிடமாக உள்ளது. (ஓ-6)

# வேற்றுக்கிரக உயிரினங்கள் பூமியில் எம் மத்தியில் மறைந்து இருக்கலாம்

## அமெரிக்க பௌதீகவியலாளர்



போல் டேவிஸ்

"வேற்றுக்கிரக உயிரினங்கள் செவ்வாயிலோ அன்றி ஏனைய கோள்களிலோ மட்டும் வாழ வேண்டுமென்ற அவசியமில்லை. அவை எம்மிடையே மறைந்து தற்போது வாழ்ந்து கொண்டிருக்கலாம்" என அமெரிக்க பௌதீகவியல் நிபுணரான பேராசிரியர் போல் டேவிஸ் தெரிவித்தார்.

மேற்படி "நிழல் உயிரினங்கள்" நச்சுத் தன்மை மிக்க உப்பு ஏரிகளிலும் உயர் வெப்ப நிலை நிலவும் ஆழ்கடலிலும் மறைந்திருக்கலாம் என அரிஸோனா பல்கலைக்கழக பேராசிரியரான போல் டேவிஸ் கூறினார்.

"அத்துடன் அந்த உயிரினங்கள், நாம் அடையாளம் காணாதவாறு எம்மிடையேயும் வாழ்ந்து கொண்டிருக்கலாம். அதனால் வேற்றுக்கிரகவாசிகளைத் தேடி ஏனைய கோள்களுக்கு செல்ல வேண்டிய அவசியம் எமக்கில்லை" என அவர் தெரிவித்தார்.

"வேற்றுக்கிரக உயிரினங்கள் எவ்வாறு தோற்றமளிக்கும் என்றோ அவை எவ்வாறு செயற்படும் என்றோ நாம் அறியாதுள்ளதால், அந்த உயிரிணங்களை எமது பூகோள உயிரி இரசாயனத்திலிருந்து வேறுபடுத்தி அறியும் ஆற்றல் எமக்கு இல்லாதுள்ளது" எனக் குறிப்பிட்ட போல் டேவிஸ், "பரிசோதனைகள் மூலம் அவற்றை நாம் அடையாளம் காணும் சாத்தியம் உள்ளது. ஏனெனில் அவை சிறிது வேறுபட்ட பரம்பரை அலகுகளையோ அல்லது அமினோ அமிலக் கூறுகளையோ கொண்டிருக்க வாய்ப்புள்ளது" என்று கூறினார்.

உலகில் உயிர் வாழ்வனவற்றின் அடிப்படைக் கூறுகளான ஐதரசன், ஒட்சிசன், நைதரசன், பொஸ்பரஸ் என்பனவற்றிலிருந்து மாறுபட்ட இரசாயனக் கூறுகளை அந்த வேற்றுக் கிரக உயிரினங்கள் கொண்டிருக்கலாம் எனக் கூறிய அவர், உதாரணத்துக்கு ஆசனிக் நச்சு இரசாயனங்கள் போன்ற மூலகங்கள் அவற்றில் காணப்படலாம் என்று தெரிவித்தார். (ஓ-6)

# பாகிஸ்தானில் பின்லேடன் ஒளிந்திருக்கும் இடம் கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

சர்வதேச பயங்கரவாதி பின்லேடன், பாகிஸ்தானில் ஒளிந்து இருக்கும் இடம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தேடப்பட்டுவரும் தலைமறைவு தீவிரவாதிகளில், உலகத்திலேயே அதி பயங்கரவாதியான பின்லேடன், கடந்த 8 ஆண்டுகளுக்கு மேலாக தலைமறைவாக இருந்து வருகிறான். அமெரிக்காவின் இரட்டைக் போபுர தகர்ப்பு உள்ளிட்ட பல்வேறு நாசவேலைகளில் தொடர்புடைய அவனை, அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் தீவிரமாக தேடி வருகின்றன.

இந்த நிலையில், அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான ஆய்வில், பின்லேடன் ஒளிந்திருக்கும் இடம் பற்றி தகவல் தெரிய வந்துள்ளது.

செயற்கை கோள் உதவியுடன் நடைபெற்ற புவியியல் ஆய்வில்; பாகிஸ்தானில், ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள பராசினர் நகரில் அவன் பதுங்கி இருக்கும் விவரம் தெரிய வந்துள்ளது.

ஆப்கானிஸ்தான் எல்லையில் இருந்து பாகிஸ்தானுக்குள் 12 மைல் உட்புறமாக அமைந்திருக்கும் பராசினாரில், சுற்றுச் சுவருடன் கூடிய 3 கட்டிடங்களில் ஒன்றில் பின்லேடன் மறைந்திருக்கலாம் என்று, ஆய்வுக் குழுவின் தலைவர் தோமஸ் கில் லஸ்பி தெரிவித்திருக் கிறார்.



விமானங்களின் பார்வையில் இருந்து தப்புவதற்காக, அவன் ஒளிந்திருக்கும் கட்டடம் மரங்களால் சூழப்பட்டுள்ளது.பின்லேடன் தனிமையில் ஒளிந்து இருந்தாலும், அவனுக்கு பாது காப்பாக சில மெய்க் காப்பாளர்கள் இருப்பதும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

மின்சார வசதியுடன் கூடிய அந்த மறைவிடத்தில் பின்லேடனுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வரலாம் என்றும் தோமஸ் கில்லஸ்பி கூறியிருக்கிறார்.

பின்லேடன் தொடர்பாக கிடைத்த பல்வேறு புலனாய்வு தகவல்ளின் அடிப்படையில் இரவு நேரத்தில் எடுக்கப்பட்ட செயற்கை கோள் படங்கள் மற்றும் இதர தொழில்நுட்ப உதவியுடன் இந்த ஆய்வு நடைபெற்றதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ-6)

# சுவானின் துல்லியமான சுழலில் மேற்கிந்தியத்தீவுகள் சுருண்டது

## இங்கிலாந்து அணி முன்னிலையில்



சுவானின் துல்லியமான சுழலில் மேற்கிந் தியத்தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் 285 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக் களையுமிழந்தது.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 281 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை யிலிருந்த இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை யிழந்து 31 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 டெஸ்ட்,5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்று 1:0 என்ற முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்திற்கு ஆபத்தான மைதானம் காரணமாக ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் கடந்த 15ஆம் திகதி அன்டிகுவா மனமகிழ் மைதானத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களையிழந்து 566 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் அணித்தலைவர் ஸ்ரொரஸ் 169 ஓட்டங்களையும் கொலின்வூட் 113 ஓட்டங்களையும் ஷா 57,குக் 52,பீற்றர்சன் 51 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரெய்லர்,எட்வோட்ஸ்,ஹைன்ட்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஹயில்,நாஷ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டையிழந்து 55 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர்கள் சுவானின் துல்லியமான சுழலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் முதலாவது இன்னிங்ஸில் 285 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. இதில் சர்வான் 94 ஓட்டங்களையும் சிமித் 38 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஹயில் 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சுவான் 24 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 57 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை பதம் பார்த்து டெஸ்ட்டில் தனது முதலாவது இன்னிங்ஸ் ஒன்றில் 5 விக்கெட்டை வீழ்த்தினார். பிளின்டொப் 3,ஹார்மிசன்,பிறோட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 281ஓட்டங்கள் பின்னிலையிலிருந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி பொலோன் நிலைக்கு தள்ளப்பட்டது.

எனினும் அணித்தலைவர் ஸ்ரொரஸின் தீர்மானப்படி இங்கிலாந்து அணி தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டையிழந்து 31 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் அணித்தலைவர் ஸ்ரொரஸ் 14 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்ததுடன் குக், அன்டர்சன் ஆகியோர் தலா 4 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

பந்துவீச்சில்எட்வோட்ஸ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். நான்காம் நாள் ஆட்டம் நேற்று இலங்கை நேரப்படி இரவு நடைபெற்றது.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... (12)





இலங்கை-இந்திய அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி இரவு பகல் ஆட்டமாக நடைபெற்றது. இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் மொகமெட் அசாருதீன் முதலில் களத் தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 204 ஓட்டங்களை எடுத்தது. இதில் 11ஆவது நிலை வீரராக களமிறங்கவிருந்த முரளிதரன் தனது முதலாவது ஒருநாள் போட்டியில் துடுப்பெடுத்தாட முடியாமல் போனது.

பதிலுக்கு 50 ஓவர்களில் 205 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையு மிழந்து 196 ஓட்டங்களைமாத்திரமெடுத்து 8 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இலங்கை அணியின் இந்த வெற்றிக்கு ஒரு வகையில் அறிமுக வீரர் முரளிதரனும் காரணமாகவிருந்தார். முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி 38 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இந்திய அணியின் 6ஆம் நிலை அதிரடி துடுப்பாட்ட வீரரான அமீர் ஒரு ஓட்டம் மாத்திரம் எடுத்திருந்த நிலையில் நேரடியாக முரளிதரன் போல்ட் முறையில் ஆட்டமிழப்பு செய்து வெளியேற்றினார்.

இதன் மூலம் அறிமுகமான முதலாவது சர்வதேச ஒரு நாள் போட்டியிலேயே முரளிதரன் சாதித்துக் காட்டினார். மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இரு அணி களும் ஒரு போட்டியில் வெற்றிபெற்று தொடர் சமனிலை யிலுள்ள நிலையில் தீர்க்கமான மூன்றாவதும் இறுதியு மான போட்டி 1993ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14ஆம் திகதி மொறட்டுவ ரி.பெர்னாண்டோ விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 227 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 5 ஓவர்கள் மாத்திரம் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 21 ஓட்டங்களைக் கொடுத்து இந்திய அணியின் மூன்றாம் நிலை துடுப்பாட்ட வீரர் வினோத் காம்ளியை 19 ஓட்டங்களுடன் வெளியேற்றி ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

மொறட்டுவ மைதானம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருந்தமையால் ரணதுங்கா வேகப்பந்து வீச்சாளர்களை முழுமையாக பயன்படுத்தியதுடன் சுழல் பந்துவீச்சாளர்களில் ஜெயசூரியாவையும் பயன்படுத்தினார்.

இதனால் ஒரு விக்கெட்டை வீழ்த்தி சாதித்த போதும் இப்போட்டியில் முரளிதரன் 10 ஓவர்களையும் வீசிமுடிக்காமல் போனது துரதிர்ஷ்டமே.

பதிலுக்கு 50 ஓவர்களில் 218 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி மஹாநாமவின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 49.3 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 231 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இப்போட்டியிலும் முரளிதரனால் துடுப்பெடுத்தாட முடியாமல் போனது. இவ்வெற்றியின் மூலம் இலங்கை அணி ஒருநாள் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

**பாலா**

# தோனி, சேவாக்கை நினைத்தாலே பயம்

(கிறிஸ்ட்சேர்ச்)

நியூசிலாந்தில் மைதானங்கள் சற்று சிறிதாக இருப்பதால்; சேவாக், தோனி போன்ற வீரர்களின் அதிரடியைக் கட்டுப்படுத்துவது மிகப் பெரிய சவாலாக இருக்கும் என்று நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோரி கூறியுள்ளார்.

தோனி தலைமையிலான இந்திய அணி இரண்டு இருபது -20, 5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் நியூசிலாந்துடன் மோதவுள்ளது. முதல் இருபது -20 போட்டி 25 ஆம் திகதி நடக்கிறது.

இந்தியத் தொடர் குறித்து நியூசிலாந்து அணித்தலைவர் விக்டோரி கூறியதாவது,

கடந்த சில ஆண்டுகளாக இந்திய அணி மிகச் சிறப்பாக விளையாடி வருகிறது. அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடர்களில் அந்த அணி அபாரமாக வென்றுள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டு நியூசிலாந்து வந்த இந்தியா 0-2 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரையும் 2-5 என்ற கணக்கில் ஒருநாள் தொடரையும் இழந்தது.

ஆனால் இம்முறை இந்திய அணி முழுப் பலத்துடன் நல்ல ஆட்ட நிலையில் உள்ளதால் இருபது -20 மற்றும் ஒருநாள் தொடர் மிகவும் பரபரப்பாக இருக்கும்.

குறிப்பாக, இங்குள்ள மைதானங்கள் சற்றுச் சிறியவை என்பதால்; சேவாக், தோனியின் அதிரடி ஆட்டம் எங்களுக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கும்.


அதேநேரத்தில் நியூசிலாந்து அணியிலும் சிறந்த வீரர்கள் உள்ளனர். காயம் காரணமாக ஓய்வில் இருக்கும் ஸ்ரைரிஸ், ரைடர், ஜேக்கப் ஓரம் அணிக்குத் திரும்பினால் கூடுதல் பலம் கிடைக்கும். (5)

# இவானோவிச்,டெமன்டிவா காலிறுதிக்கு முன்னேற்றம்

(டுபாய்)

பெண்களுக்கான டபிள்யு.டி.ஏ. அந்தஸ்து பெற்ற பார்கிளேஸ் டுபாய் டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடர் டுபாயில் நடக்கிறது. நேற்று நடந்த ஒற்றையர் மூன்றாவது சுற்றுப் போட்டியில் செர்பியாவின் அனா இவானோவிச், பிரான் சின் கேமிலி பின்னை 6:2,7:6 என்ற நேர் செட்டில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் பிரான்சின் விர்ஜினி ரசானோ,சுலோவேகியாவின் டேனியலா ஹண்ட்சோவாவை 6:2,1:6,6:2 என்ற செட் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு தகுதிபெற்றார். மற்றொரு போட்டியில் ரஷ்ய வீராங்கனை எலினா டெமன்டிவா,ஸ்பெயினின் அனபெல் மெடினாவை 6:1,6:3 என்ற நேர் செட்டில் வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தார்.

# எண் விளையாட்டு-17



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



# பிரணாப் முகர்ஜியின் உரைக்கு பா.ம.க., ம.தி.மு.க. கண்டனம்

## 2 முறை சபை ஒத்திவைப்பு

ஈழத்தில் அப்பாவி தமிழர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் சுட்டுக் கொல்வதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையின் மத்திய பகுதிக்குச் சென்றுஅமளியில் ஈடுபட்டனர். இதனால் நாடாளுமன்ற மக்கள் அவை 2 முறை ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்ற மக்கள் அவையில் இலங்கை இனச்சிக்கல் குறித்து நேற்று அறிக்கை அளித்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, இலங்கையில் தமிழ் சமுதாயத்திற்கு விடுதலைப் புலிகள் பெரும் சேதம் ஏற்படுத்தியுள்ளனர். தமிழ் சமுதாயத்திற்கு அவர்கள் நன்மை செய்ய விரும்பினால் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும்.

இலங்கையில் 48 மணி நேரம் போர் நிறுத்தம் செய்யப்பட்டபோது போர் பகுதியில் இருந்து தப்பி வந்த மக்களை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றனர் என்று கூறினார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பா.ம.க., ம.தி.மு.க வைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையின் மத்திய பகுதிக்குச் சென்று முழக்கம் எழுப்பினர்.

விடுதலைப்புலிகள் குறித்து தெரிவித்த கருத்துக்களை பிரணாப் முகர்ஜி திரும்பப் பெற வேண்டும். இலங்கையில் போரை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

இதனால் சபையில் பெரும் அமளி ஏற்பட்டதையடுத்து சபை நடவடிக்கைகளை 15 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக மக்கள் அவைத்தலைவர் சோம்நாத் சட்டர்ஜி அறிவித்தார்.

அதன் பின்னர் மீண்டும் அவை கூடிய போதும் பா.ம.க., ம.தி.மு.க. உறுப்பினர்கள் தங்களின் நிலைப்பாட்டை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

இலங்கை இனப்படுகொலைக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் இரு கட்சிகளின் உறுப்பினர்களும் கறுப்புச் சட்டை அணிந்து அவை நடவடிக்கைகளில் பங்கேற்றனர். இரு கட்சிகளின் போராட்டத்தால் அவையை நடத்த முடியாத நிலை ஏற்பட்டதையடுத்து பிற்பகல் 2.00 மணிவரை அவையை ஒத்திவைப்பதாக மக்களவைத் துணைத் தலைவர் சரன்ஜித்சிங் அத்வல் அறிவித்தார்.

பிற்பகல் 2.00 மணிக்கு அவை கூடிய போதும் இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்று பா.ம.க., ம.தி. மு.க உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இதனையடுத்து இரு கட்சிகளின் உறுப்பினர்களும் உரையாற்ற அவைத்தலைவர் சோம்நாத் சட்டர்ஜி அனுமதி அளித்தார்.

(ச-5)

## கடற்படைக்கு தரைப்படைப் பிரிவு

மன்னார்-முருங்கன் வீதியில் கடற்படையின் தரைப்படைப்பிரிவொன்று பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கடற்படைக்கான ஊடகப் பேச்சாளர் கப்டன் டீ.கே.பி.தஸநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக்காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அவர் மேலும் கூறியதாவது, முல்லைத்தீவில் 7 கடல் மைல்களுக்கான பிரதேசம் யுத்த சூனிய பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது இப்பிரதேசத்தில் படகுகள் மூலம் புலிகள் தாக்குதல்களை நடத்த முடியாதளவில் கடற்படையினர் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர். செஞ்சிலுவைச்சங்கத்தின் உதவியுடன் கிறீன் ஓஷன் கப்பல் மூலம் காயமடைந்த பொதுமக்கள் மூன்று முறை திருகோணமலைத் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்றார்.

(ச-5)

## தமிழகத்தில் நேற்று...

தந்தையுமாவார்.

இலங்கையில் நடைபெற்று வரும் தமிழர்கள் மீதான தாக்குதல்கள், மக்கள் உயிரிழப்புக்கள் குறித்து மன அழுத்தத்தில் இருந்து வந்த இவர், கடந்த மாதம் வீட்டின் அருகில் உண்ணாநிலைப் போராட்டமும் நடத்தியுள்ளார்.

இந்நிலையில் மனைவியும் குழந்தையும் வேளாங்கண்ணி கோயிலுக்கு சென்றிருந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்ட இவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நேற்று புதன்கிழமை பிற்பகல் இலங்கையில் போரைத்தடுத்து நிறுத்தக் கோரி உடலில் மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டு தீயிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து விரைந்து வந்த பொலிஸார் சோதியை அங்குள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். 90 சதவீதம் உடல் எரிந்துள்ளது என்றும் 3 மணிநேரம் கழித்த பின்னரே நிலைமை குறித்து தெரிவிக்க முடியும் என்றும் மாலை மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து கடலூர் புதுநகர் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணைகள் நடத்தி வருகின்றனர்.

தீக்குளிப்பு முயற்சிக்கு முன்னதாக சோதி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தீக்குளிப்பு முடிபு குறித்து தெரிவித்ததாகவும் அவர் ஆறுதல் கூறியதுடன் அது போன்ற நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என்று வலியுறுத்தியதாகவும் அதனை மீறி சோதி தீக்குளித்தார் என்றும் கூறப்படுகிறது.

(ச-3,5)

## ஐ.நா. பிரதிச்...

இடம்பெற்ற உரையாடலின்போது, தாம் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே ஜோன் ஹோம்ஸின் விஜயம் இடம்பெறவுள்ளதாக றோகித போகொல்லாகம குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஜோன் ஹோம்ஸ் ஜனாதிபதியையும் சந்திக்கவுள்ளார். இந்நிலையில் ஜோன் ஹோம்ஸ் உடன் மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்த சுமுகமான பேச்சுவார்த்தைகளை நடத்த தாம் எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்கால அரசியல் வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி தமிழ் தேசியக் கூட்டமைப்பு,ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட்ட தமிழ் கட்சிகளை அழைத்து கலந்துரையாடவுள்ளதாகவும் றோகித போகொல்லாகம குறிப்பிட்டுள்ளார்.

(ச-3,5)

## இனப்பிரச்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தற்பொழுது முன்னெடுத்திருக்கும் அணுகுமுறையானது மோதல்களை முடிபுக்குக் கொண்டுவருவதற்குப் பொருத்தமானது எனினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது சொல்லைக் கேட்க மாட்டார் என சந்திரிகா தெரிவித்துள்ளார்.

'இறுதித் தீர்வுக்கு பேச்சுவார்த்தையே ஒரேயொரு வழி' என்றும் அவர் கூறியுள்ளார்.

(ச-5)

## ஈழப்பிரச்சினைக் கோரிக்கைகள் ஈமெயில் மூலம் ஒபாமாவுக்கு

## அனுப்பக் கோருகிறார் விஜயகாந்

(சென்னை)

உலகம் எங்கும் உள்ள தமிழர்கள் அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கும், ஐ.நா.பொது செயலாளர் பான் கீ மூனுக்கும் இலங்கை தமிழர் படுகொலையை தடுக்க ஈ.மெயில் மூலம் செய்தி அனுப்பக் கேட்டுக்கொள்கிறேன் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந் தெரி வித்துள்ளார்.

அதிபர் ஒபாமாவின் இ.மெயில் முகவரி **(http:// www.whitehouse.gov/contact)** ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனின் ஈ.மெயில் முகவரி **(inquires@un.org/)** ஆகிய முகவரிக்கு செய்திகளை அனுப்ப முடியும்.

இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் செய்து தமிழினப் படுகொலையை தடுக்க வேண்டும் என்றும் அங்குள்ள தமிழர்கள் சம உரிமை சம அந்தஸ்து சம வாய்ப்புகளோடு அந் நாட்டு குடிமக்களாக நடத்தப்பட வேண்டும் என்றும் அதற்கு உரிய வகையில் அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவற்றின் மூலம் அமைதி ஏற்பட்டு இலங்கையில் இருந்து அகதிகளாக வெளியேறி அல்லல் படும் மக்கள் தாங்கள் பிறந்த சொந்த மண்ணிற்கு திரும்ப வழிவகை காண வேண்டும் என்றும் அதில் குறிப்பிட்டு அனுப்புமாறு விஜயகாந் கோரியுள்ளார்.

(ச-5)

## விமானம் மற்றும் ஷெல்...

சீர்திருத்தப்பள்ளி, மூதாளர் நலன்பேணலகம், சிறார் பெண்கள் பராமரிப்பு இல்லங்கள் மீது நேற்று நடத்தப் பட்ட விமானக் குண்டுத் தாக்குதலில் 21க்கும் அதிகமான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 71 பேர் படுகாயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளால் போர்க் கைதிகளாக பிடிக்கப்பட்ட கடற்படையினர் தரைப்படையினர் தடுத்து வைக்கப்படும் சீர் திருத்தப்பள்ளி மீது நேற்று விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

இந்த சீர்திருத்தப் பள்ளியினை அடிக்கடி அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரிகள் பார்வையிட்டுவருவதுண்டு என செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மூதாளர் நலன்பேணலகம், பெண்கள் உளவளப்பராமரிப்பு நிலையமான-வெற்றிமனை, தாய்சேய் பராமரிப்பு நிலையமான-மலர்ச்சோலை,செந்தளிர் சிறுவர் இல்லம், பாதிக்கப்பட்ட பெண்கள் பராமரிக்கப்படும்-மேரிஇல்லம், நிறைமதியில்லம், அன்புமனை தாய்சேய் நலம் இல்லம், குருகுலம் சிறுவர் இல்லம் என்பவற்றின் மீதும் நேற்று 12.30 மணியளவில் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் 21 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் 71 பேர் காயமடைந்துள்ளனர். (எ-5)

## யுத்தப் பிரதேசத்தில்...

இறைமையுள்ள ஒரு நாடு என்ன செய்ய வேண்டும் என்று இந்தியாவால் கூறமுடியாது. அதேவேளை போர்ப் பிரதேசத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்பதற்கு உதவிகளைச் செய்ய இந்தியா தயாராக இருக்கிறது என்றும் பிரணாப் முகர்ஜி கூறினார்.

இந்திய நாடாளுமன்ற மக்களவையில் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக அறிக்கையொன்றினை தாக்கல் செய்து உரையாற்றிய பிரணாப் முகர்ஜி மேலும் கூறியதாவது,

இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்குள் பெருமளவில் முன்னேறி இருக்கிறது.

புலிகளின் கட்டுப்பாட்டில் 150 சதுர கிலோமீற்றர் பரப்பளவே இருக்கின்றது. 70 ஆயிரம் பொதுமக்களை விடுதலைப் புலிகள் பிடித்து வைத்துள்ளார்கள்.

கடந்த இரண்டு வாரங்களில் 35 ஆயிரம் பொதுமக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வெளியேறி வந்திருக்கிறார்கள்.

அவ்வாறு தப்பி வருவோர் மோதல்களின் இடையே சிக்கிக் கொள்கிறார்கள். இவ்வாறு தப்பி வருபவர்களை விடுதலைப் புலிகள் தடுக்கிறார்கள். சிலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவ நடவடிக்கை இறுதிக்கட்டத்தை அடைந்துகொண்டிருக்கும் நிலையில் விடுதலைப்புலிகள் அனைத்துப் பொதுமக்களையும் விடுவிப்பதோடு அவர்கள் ஆயுதங்களையும் கீழே போடவேண்டும் என்று அவர் கூறினார்.

போர்ப் பிரதேசத்தில் சிக்கிய மக்களை மீட்க இந்தியா தயாராக உள்ளது. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் பாதுகாப்பு, மறுவாழ்வு பொறுப்புக்களை இலங்கை அரசு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கின்றோம்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் சமூகம் உட்பட அனைத்து சமூகத்தையும் உள்ளடக்கி அரசியல் தீர்வு காண இந்திய தொடர்ந்தும் ஆதரவு அளிக்கும், விடுதலைப்புலிகள் இயக்கம் இந்தியாவில்தொடர்ந்து தடைசெய்யப்பட்ட இயக்கமாக இருக்கும்.

அவர்கள் தமிழ் சமூகத்திற்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். 23 ஆண்டுகளாக நடைபெற்ற மோதல்களின் பின்பு வடமாகாணத்திலும் இலங்கை முழுவதிலும் இயல்பு வாழ்க்கையைக் கொண்டுவர ஒரு அரசியல்வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு செயல் வடிவம் கொடுக்கும் 13-வது, அரசியல் சீர்திருத்தத்தை முழுமையாக செயற்படுத்துவது, அதன் முதல் உறுதியான நடவடிக்கையாக இருக்கும் எனவும் குறிப்பிட்ட இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி ; தான் இலங்கைக்கு வந்த போது கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே இலங்கை ஜனாதிபதி 48 மணிநேர சண்டை நிறுத்தத்தை அறிவித்தார் எனவும் அவர் கூறினார். (ச-3,5,14)

## சம்பந்தன் எம்.பியின்...

அவர்கள் மீது பல வித அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர். தப்பியோடுவோர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்கின்றனர்.

ஆனால் அரசாங்கம் வன்னியிலுள்ள பொதுமக்களை பாதுகாப்பதற்காக பாதுகாப்பு வலயங்களை அறிவித்துள்ளது.புலிகளின் பிடியிலிருந்து தப்பி வருவோருக்கு உணவும் மருத்துவ வசதிகளும் உறைவிடமும் வழங்குகின்றது.

தான் பொதுமக்களின் பிரதிநிதி என்று கூறிக்கொள்ளும் சம்பந்தன் நாடாளுமன்றத்தில் ஒரு போதும் பொதுமக்களுக்காக குரல் எழுப்பவில்லை.

புலிகளின் நலனுக்காகவே பேசியுள்ளார். புலிகளின் அட்டூழியங்களை நியாயப்படுத்தும் புலிகளின் பிரதிநிதியாகவே செயற்பட்டுள்ளார்.

வன்னியிலுள்ள பொதுமக்களுக்கு உணவில்லை ,மருந்தில்லை என்றெல்லாம் பொய் கூறியுள்ளார் சம்பந்தன். ஆனால் அரசாங்கம் தேவையான உணவு மற்றும் மருந்து வகைகளை விமானம் மூலமும் கடல் வழியாகவும் அனுப்பி வருகின்றது.நேற்றும் உணவுப் பொருட்கள் வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவித்தால் அதற்கு புலிகளும் இணங்குவார்கள் என சம்பந்தன் கூறியிருப்பது நகைப்புக்குரிய விடயமாகும். பயங்கரவாதத்தை இந்த நாட்டிலிருந்தே துடைத் தெறியும் திடசங்கற்பத்துடன் அரசு திட்டமிட்டு செயலாற்றி வருகின்றது.அதில் உறுதியாகவும் உள்ளது.எனவே யுத்த நிறுத்தத்தை அரசு நிராகரிக்கிறது.

(ச-5)

எமது புதிய வெளியீடு
சுந்தர் C நடிக்கும் பெருமாள் அவுட்லேண்டர் (தமிழாக்கம்) VCD, DVD.
FLASH CD HOUSE
No.: 1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2267)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.